மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 6 • இதழ் 5 • நவம்பர் 2021 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்



# புதிய முயற்சிகள் சிறப்பிதழ்

இனிய
தீபாவளி
வாழ்த்துகள்



துடிப்பான
இளைஞர்களின்
சரியான தேர்வு.
உடலுக்கு மிருதுவான
மற்றும் உயர்தரமான
ராம்ராஜ் சர்ட்டுகள் ஒவ்வொரு
இளைஞர்களுக்கும் சரியான
தேர்வாக அமையும்.
SCAN THE QR
CODE TO WATCH
மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
சர்ட்டுகள்
கம்பெனி ஷோரூம் & முன்னணி ஜவுளி நிறுவனங்களிலும் கிடைக்கும்
shop online@ www.ramrajcotton.in

மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

வாழ்வின் எல்லா நிலைகளிலும்
புதுமையான முயற்சிகள் செய்து
அதனால் முன்னேற்றம் பெற்று
வெற்றிகரமாக வாழ வழிகாட்டும்

# புதிய முயற்சிகள் சிறப்பிதழ்

**என்ற இந்த இனிய நூலை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம்.**



# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

முயற்சி திருவினையாக்கும். புதிய முயற்சிகள் அதையே பெரிய வெற்றியாக மாற்றும். பூமியில் வாழ்கிற ஒவ்வொரு உயிரும் உயிர் வாழ்வதற்காக உணவைத் தேடி உண்கின்றன. காலம் காலமாக அவை ஒரேவிதமாக முயற்சி மேற்கொண்டு, ஒரேவிதமான உணவை மட்டுமே உட்கொள்கின்றன. ஆனால், மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்து, நிலத்தை உழுது விதவிதமான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து, சமைப்பதிலும் உணவுக்கு சுவையூட்டுவதிலும் விதவிதமான புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறான். மனித இனத்தின் தனித்துவமே புதிய முயற்சிகள்தான்.

வாழ்வில் ஒருவர் முன்னேற வேண்டுமெனில் புதிய முயற்சிகளை மேற்கொள்வது அவசியம் என்பதை உணர்த்தும் ஒரு கதை உண்டு. தனது சொந்த உழைப்பில் மாபெரும் தொழில் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கிய ஒரு தந்தை ஓய்வு பெறத் தீர்மானித்தார். அவரின் இரண்டு மகன்களுமே தலைமைப் பொறுப்புக்கு வர போட்டியிட்டனர். இருவரில் மிகத்திறமைசாலி யாரோ, அவரிடமே தொழில் நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை ஒப்படைக்க தீர்மானித்தார்.

மகன்களின் தொழில் திறனை சோதிக்க, பத்தாயிரம் தலை வாருகிற சீப்பு உற்பத்தி செய்வதற்கான தொகையை இருவரிடமும் கொடுத்தார். ‘‘இருவரும் அவர்களின் விருப்பப்படி சீப்பு வடிவமைத்து கொள்ளலாம். ஆனால், பௌத்த துறவிகள் வந்து போகிற ஆலயத்தின் முன்பு நின்று இந்த சீப்புகளை விற்க வேண்டும்’’ என்று நிபந்தனை விதித்தார். மூத்த மகன் அந்த நிபந்தனையைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தான். ‘மொட்டையடித்து துறவற கோலத்தில் அதிகமான புத்த துறவிகள் வந்துபோகிற ஆலயத்தில் சீப்பு விற்பனை செய்தால் யார் வாங்குவார்கள்?’ என்று திகைத்தான்.

இளைய மகன் புன்னகையோடு தந்தையிடம் இருந்து பணத்தை வாங்கிச் சென்று சீப்பு உற்பத்தி செய்து விற்க ஆரம்பித்தான். ‘அழகிய சீப்புகள் விற்பனைக்கு’ என்கிற விளம்பரப் பதாகையோடு ஆலயத்தின் வாசலில் நிற்கிற இளைஞனை வியப்புடன் அனைவரும் பார்த்தார்கள். துறவிகளை அவமதிக்கும் விதமாக அந்த இளைஞன் இப்படிச் செய்கிறான் என்று நினைத்து சிலர் கோபமாக அவன் அருகே சென்றதும் அவர்களிடம் அவன் சீப்பு வழங்கினான். கோபமாக அதை வாங்கிப் பார்த்தவர்கள், உடனடியாக மகிழ்ந்து அவனிடம் பணம் கொடுத்தனர். புத்தரின் வாழ்வியல் போதனைகளை ஒவ்வொரு சீப்பிலும் பதிந்து விற்பனை செய்த காரணத்தால், புத்தர் பெருமானை வணங்க வருகிறவர்கள் ஆர்வமாக வாங்கிச் சென்றனர். விரைவில் அவன் கொண்டு சென்ற எல்லா சீப்புகளும் விற்று தீர்ந்தன. தந்தையின் தொழில் சாம்ராஜ்ஜியத்தின் தலைமைப் பொறுப்புக்கு இளைய மகன் நியமிக்கப்பட்டதாக கதை முடியும்.

‘மொட்டை அடித்திருக்கும் துறவிகள் சீப்பு வாங்குவார்களா’ என்று நினைத்து முயற்சியில் இருந்து பின்வாங்காமல், அந்தப் பொருளின் மதிப்பை உயர்த்தி எப்படி வழங்குவது என்று சிந்தித்ததும், அதை செயல்படுத்தியதும் ஒரு இளைஞனின் வெற்றியானது. புதிய முயற்சியின் அவசியத்தை வலியுறுத்துகிற இந்தக் கற்பனை கதை, ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு முற்றிலும் பொருந்திப் போகும். புதிய முயற்சிகளே எங்கள் நிறுவனத்தை தொடர்ந்து வெற்றிப்பாதையில் நடத்துகின்றன.

‘காலம் மாறுகிறது. நவநாகரிக உடைகளே அனைவரையும் கவர்ந்திழுக்கும். விழாக் காலங்களில்கூட வேட்டிக்கு மதிப்பு இருக்காது. எதற்காக தெரிந்தே தோற்கும் முயற்சியில் ஈடுபடுகிறாய்’ என்று வேட்டி விற்பனையை நான் தொடங்கியபோது பலர் என்னிடம் நேரடியாகவே கூறி இருக்கிறார்கள். அவர்களின் ஆலோசனையில் உண்மையான அக்கறை இருந்தது.

உடையில் மட்டுமல்ல, உறவுகளில்கூட ‘காலம் மாறுகிறது’ என்கிற வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகம். நாம் இளம் வயதில் இருந்ததைப் போல, பிள்ளைகள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. பேரப்பிள்ளைகளின் காலம் இன்னும் வெகுவாக மாறி இருக்கிறது. காலத்திற்கு ஏற்ப நாம் மாறிக்கொண்டால்தான் உறவுகளைத் தக்க வைக்க முடியும்.

‘வேட்டியை யாரும் விரும்ப மாட்டார்கள்’ என்று மேலோட்டமாக மட்டுமே சொன்னதை நான் ஏற்கவில்லை. கால மாற்றத்திற்கு ஏற்ப வேட்டியில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தால் வாடிக்கையாளர்கள் வரவேற்பார்கள் என்று உறுதியாக நம்பினேன். நம் பாரம்பரிய உடையைப் புதுப்பித்து மக்கள் விருப்பத்துடன் அணிவதற்கு ஏற்றபடி என்னென்ன புதிய மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்று தீவிரமாக சிந்தித்தேன்.



'மதிப்புக்குரியவர்களுக்கு ராம்ராஜ் வேட்டிகள்' என்ற கருத்தை புதிய புதிய விளம்பரங்களின் மூலம் மக்களின் மனதில் பதிய வைத்தேன். வேட்டி கட்டுவதற்கு நெகட்டிவாக எந்தெந்த காரணங்களைக் கூறினார்களோ, அவற்றை அப்படியே பாசிட்டிவாக மாற்றினேன்.

'இடுப்பில் வேட்டி நிற்குமா' என்று நகைச்சுவைத் துணுக்குகளையே ராம்ராஜ் இன்று அர்த்தமிழக்கச் செய்திருக்கிறது. வெண்மை நிற வேட்டிக்கான பெல்ட் தயாரிப்பு முதல் இன்று வெல்க்ரோ வேட்டிகள் வரை புதிய முயற்சிகளின் மூலம் அனைவரும் விரும்பி உடுத்துகிற கம்பீரமான உடையாக வேட்டியை மாற்றியிருக்கிறது. பாரம்பரிய பஞ்சகச்ச வேட்டி கட்டத் தெரியவில்லை என்கிற இளைஞர்களுக்கு, பேன்ட் போல வேட்டியை உடுத்திக்கொள்ளும் விதமாக காலத்திற்கேற்ப மாற்றத்தைக் கொண்டு வந்தோம். சிறுவயதில் வேட்டியின் கம்பீரத்தை அணிந்து அனுபவித்தால்தான் இளைஞராக வளரும் வயதில் அதன் பாரம்பரியப் பெருமிதத்தை உணர முடியுமென, லிட்டில் ஸ்டார் வேட்டிகள் கொண்டு வந்தோம்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் மாத இதழாக வெளிவரும் 'வெண்மை எண்ணங்கள்' வரை அனைத்தும் புதிய முயற்சிகளின் மீது இருக்கும் நம்பிக்கைதான். வாடிக்கையாளர்கள் பயனுள்ள புதிய முயற்சிகளை எப்போதும் அமோக ஆதரவு தந்து வரவேற்கின்றனர். சமீபத்தில் ராம்ராஜ் முன்னெடுத்த 'காந்தி வேட்டி நூற்றாண்டு விழா', புதிய முயற்சிக்குக் கிடைத்த வரவேற்பு என் எண்ணத்தை மீண்டும் உறுதி செய்தது. காந்தி வேட்டி அணிந்த நூற்றாண்டை ஒரு நாள் விழாவாக இல்லாமல், ஒரு வருடம் முழுவதும் ராம்ராஜ் கொண்டாடுவதை அனைவரும் மனமுவந்து பாராட்டினர். வாடிக்கையாளர்களுக்கு பயனுள்ள பரிசாக காந்திய சிந்தனைகளை வழங்குவன் மூலம் ராம்ராஜ் காட்டன் தயாரிப்புகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் இடையில் உணர்வுபூர்வமான உறவைக் கட்டியெழுப்ப முடிகிறது.

தொழில் வெற்றிக்கு மட்டுமின்றி, தனிப்பட்ட வாழ்வில் வெற்றிகளைப் பெறுவதற்கும் எப்போதும் புதிய முயற்சிகளை முன்னெடுப்போம். அதன் அவசியத்தை வலியுத்துகிறது இம்மாத வெண்மை எண்ணங்கள். காலம் மாறுகிறது, உண்மைதான். ஆனால், காலத்திற்கான மாற்றத்தை நம்மாலும் உருவாக்க முடியும்.

நல்ல முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும் எங்களின் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள், உறுதுணையாக இருக்கும் நேசத்துக்குரிய நெசவாளர்கள், பெருமைக்குரிய விற்பனையாளர்கள், எங்களுடன் இணைந்து பணியாற்றும் அன்பான அலுவலர்கள், பாசத்துக்குரிய பணியாளர்கள், 'வெண்மை' வாசகர்கள் ஆகிய அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள். நம் உள்ளங்களில் நம்பிக்கையின் தீபம் ஒளிரட்டும். அனைவரின் இல்லங்களிலும் மகிழ்ச்சி பெருகட்டும்.

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்..!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் - ராம்ராஜ் காட்டன்**

# நமக்குள் இருக்க வேண்டும் முயற்சி!

ஓர் இளைஞனுக்கு வாழ்க்கையில் பெரிய கனவு இருந்தது. தன் உழைப்பால் முன்னுக்கு வந்து, ஊரில் மதிக்கத்தக்க ஒரு மனிதனாக மாற வேண்டும் என்பது அந்தக் கனவு. ஆனால், தன்னிடம் அதற்கான பலம் இருக்கிறதா என்ற சந்தேகம் அவனுக்கு எழுந்தது. தன்னால் அப்படி மாற முடியுமா என்ற தயக்கமும் ஏற்பட்டது. தன் உழைப்பை எந்தத் துறையில் செலுத்த வேண்டும், அது எப்படி பலன் தரும் என்பது அவனுக்குப் புரியவில்லை. எதை எதையோ யோசித்தான். எல்லா யோசனைகளும் அவனைக் குழப்பிவிட்டன.

கடைசியில், தன் மீது அக்கறை காட்டும் யாரிடமாவது ஆலோசனை கேட்கலாம் என்று முடிவெடுத்தான். அம்மாவைவிட அவன்மீது அக்கறை கொண்டவர்கள் யாருமில்லை. அதனால் அம்மாவிடம் போனான். தன் தயக்கத்தையும் குழப்பத்தையும் சொன்னான். ''நான் எப்படியாவது முன்னுக்கு வர வேண்டும். அதற்கான சக்தியை எனக்குக் கொடுங்கள். எந்தத் துறையில் நான் பயணம் செய்ய வேண்டும் என்று வழிகாட்டுங்கள். என்னால் ஜெயிக்க முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுங்கள்'' என்று கேட்டான்.

அம்மா அவனைக் குழப்பத்துடன் பார்த்தார். ''நான் வெளியுலகம் தெரியாதவள். எனக்கு என்ன தெரியும்? உனக்கு நான் எப்படி சக்தி கொடுக்க முடியும்? நானே நோய்களால் துவண்டு கிடக்கிறேன். வேறு யாரிடமாவது போய் யோசனை கேள்'' என்றார்.

அவன் இதைக் கேட்டு துவண்டு போனான். என்றாலும், தன் கனவை அவனால் கைவிட முடியவில்லை. தனக்குத் தெரிந்த ஒரு ஞானியிடம் போனான். விஷயத்தைச் சொன்னான். ''எனக்கு சக்தி வேண்டும். நம்பிக்கை வேண்டும். போக வேண்டிய பாதை தெரிய வேண்டும். எனக்கு வழிகாட்டுதல் கொடுங்கள்'' என்றான். அந்த ஞானியும் அவனைக் குழப்பமாகப் பார்த்தார். ''இமயமலையில் நமக்கு வேண்டுகிற சக்தியெல்லாம் கிடைக்கும்னு கேள்விப்பட்டிருக்கேன். நானும் இமயமலைக்குப் போயிருக்கேன். ஆனா, அங்கே பனியையும் குளிரையும் தவிர வேற எதையும் நான் பார்த்ததில்லை. எனக்கும் சக்தி எங்கே கிடைக்கும்னு சரியா சொல்லத் தெரியலையே'' என்றார்.

அவன் ஏமாற்றத்துடன் ஒரு துறவியிடம் போனான். விஷயத்தைச் சொன்னான். அந்தத் துறவி, ''நீ செய்யும் பிரார்த்தனையால்தான் சக்தி கிடைக்கும். நீ செல்ல வேண்டிய பாதை எது என்பதையும் கடவுள் உணர்த்துவார். ஆனால், எத்தனை நாட்களில் இதெல்லாம் நடக்கும் என்றோ, நிச்சயமாக நடக்கும் என்றோ, என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது'' என்றார்.

இப்படி யார் யாரிடமோ ஆலோசனை கேட்டு அவன் குழப்பம் இன்னும் அதிகமானது. எதுவும் செய்யத் தோன்றாமல் வீடு திரும்பிக்கொண்டிருந்தான் அவன். அப்போது அவனுடைய பள்ளி ஆசிரியர் ஒருவர் எதிரே வந்தார். நீண்ட காலத்துக்குப் பிறகு தன் மாணவனைப் பார்த்ததால் உற்சாகமடைந்த அவர், அவன் என்ன செய்கிறான் என்று விசாரித்தார்.

இளைஞன் தன் பிரச்னையை அவரிடம் சொன்னான். ''என் கனவு நிஜமாகறதுக்கு சக்தி வேண்டும். அது எங்கே கிடைக்கும்னு ஒவ்வொருத்தரா கேட்டுக்கிட்டிருக்கேன். ஆனா, யாராலையும் எனக்கு உதவி செய்ய முடியலை.''




''ஒருவரால் கூடவா முடியவில்லை?'' என்று ஆசிரியர் கேட்டார்.

''ஆமாம்'' என்று ஏமாற்றத்துடன் சொன்னான் அவன்.

''சரி. உன் மனதை நீ கேட்டாயா? உன்னிடம் சக்தி இருக்கிறதா, உன்னால் எது முடியும் என்று உனக்கு நீயே கேட்டுக் கொண்டாயா?'' என்றார் ஆசிரியர்.

அந்த இளைஞனுக்கு இதைக் கேட்டதும் தெளிவு கிடைத்தது. தன்னால் எது முடியும் என்பதும், தன் முயற்சியின் எல்லையும் தனக்கு மட்டுமே தெரியும் என்பது புரிந்தது.

நிறைய பேர், 'யாரோ வந்து தங்கள் வாழ்க்கையை மாற்றிவிடுவார்கள்' என்று நினைக்கிறார்கள். ஆனால், முயற்சியும் மாற்றமும் உள்ளுக்குள் இருந்தே வர வேண்டும். சிலர் தங்கள் புது முயற்சியில் மிகச்



சிறிய அளவில் துன்பம், தடை, ஏமாற்றம் வந்தாலே துவண்டு போகிறார்கள். ஆனால், போராட்டம் இல்லாமல் வெற்றிகள் கிடைப்பதில்லை.

சிலர் தங்கள் செல்லப்பிராணிகளாக வளர்க்கும் நாய்களைக் கூட்டிக்கொண்டு அதிகாலைகளிலும் இரவுகளிலும் வாக்கிங் வருவார்கள். அந்த நாய்கள் செழுமையாக இருக்கும். பல நாய்கள் உடல் பருமனாகி நடக்க முடியாமல் நடந்துவரும். அதிக செல்லம் கொடுத்து இப்படி வளர்க்கப்படும் நாய்களுக்கு பல உடல் உபாதைகள் வருகின்றன. சொகுசு வாழ்க்கை வாழும் இந்த நாய்களுக்கு மனிதர்களைப் போலவே சர்க்கரை நோய் வருகிறது. மனிதர்களைப் போலவே இவை மன அழுத்தத்துக்கு ஆளாகின்றன. நாய்களுக்கே உரிய இயல்பான குணங்கள் பலவும் இவற்றுக்கு இருப்பதில்லை.



ஆனால், யாருடைய வளர்ப்பும் இல்லாமல் வீதிகளில் திரியும் தெருநாய்களைப் பார்த்தால் ஓர் உண்மை புரியும். அவை உடல் பருமனால் அவதிப்படுவதில்லை. மற்ற பிரச்னைகளும் இருப்பதில்லை. தினமும் உணவு கிடைப்பதே போராட்டம் என்ற சூழலில் அவை முட்டி மோதியே எதையும் பெறுகின்றன. இந்தப் போராட்டமே அவற்றை உறுதியாக மாற்றுகிறது.

மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் வைத்திருப்பவர்களிடம் கேட்டுப் பாருங்கள். ''கடுமையாக உழைக்கும் மாடுகளும் குதிரைகளும்தான், எந்த வேலையும் செய்யாமல் இருக்கும் மாடு, குதிரைகளை விட நீண்ட காலம் வாழும். அவற்றுக்கு நோய்களும் குறைவாகவே வரும்'' என்பார்கள்.

வாழ்வில் சின்னச் சின்னதாக வரும் துன்பம், நெருக்கடி, பிரச்னை எல்லாமே நம்மை வருங்காலத்தில் மிக வலுவானவர்களாக மாற்றுகின்றன. உடல், மனம் இரண்டையும் வலுவடையச் செய்கின்றன. தடைகளோ அல்லது தோல்விகளோ, எது வந்தாலும் எடுத்த காரியத்தை முடிப்பதில் தொடர்ந்து உறுதியாய் இருங்கள். அந்த விடாமுயற்சியே நம்மை வெற்றியாளராக மாற்றும்.

பிரச்னைகளையும் தோல்விகளையும் சந்திக்க பலரும் தயாராய் இருப்பதில்லை. அதற்கான மனவலிமையை அவர்கள் வளர்த்துக்கொள்வதும் இல்லை. அதனால், எளிதில் துவண்டுவிடுகின்றனர். தோல்வியை சந்திக்கும்போது சுய இரக்கத்தால் சுருண்டுவிடுகின்றனர். தங்கள் ஏமாற்றங்களுக்கு மற்றவர்மீது பழிபோடுகின்றனர். மனக்கசப்படைகின்றனர். முயற்சியைக் கைவிட்டுவிடுகின்றனர்.

வருந்தத்தக்க விஷயம் இது. சோதனைகளும் தோல்விகளும் எதிர்ப்படும்போது, அவற்றில் நாம் கற்றுக்கொள்ள ஒரு பாடம் இருக்கிறது என்பதை மறந்துவிடுகிறோம். இழப்பு என்பது அஸ்தமனம் அல்ல, தோல்வி என்பது நிரந்தரமும் அல்ல. அவை நமக்குத் தருவது வாழ்க்கை அனுபவங்களே! முயற்சியின் பாதையில் அனுபவங்களை சேகரிப்பவர்களே முழுமையான வெற்றியைப் பெறுகிறார்கள்.

# கதை நேரம்

புதிதாகத் திருமணமான ஒரு தம்பதியர், வெளிநாட்டில் குடியேறினர். வார இறுதி நாட்களில் வீட்டில் சமையல் இல்லை. நகரின் ஒவ்வொரு ஹோட்டலுக்கும் சென்று சாப்பிட்டுப் பார்ப்பார்கள். இந்த வாரம் நகரில் புதிதாக சீன உணவகம் திறக்கப்பட்டிருப்பது கேள்விப்பட்டு போனார்கள்.

இதற்குமுன் அவர்கள் சீன உணவுகளை ருசி பார்த்ததில்லை. ஒரு ஆர்வத்தில் உள்ளே நுழைந்தார்கள். கிட்டத்தட்ட சீனாவுக்குள் வந்துவிட்டது போன்ற உணர்வு. சுவர்களில் சீன எழுத்துகளில் ஏதேதோ எழுதியிருந்தது. மெனு கார்டில்கூட சீன மொழியிலும் ஆங்கிலத்திலும்தான் அயிட்டங்கள் விவரிக்கப்பட்டிருந்தன. பெயரைப் பார்த்து எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை. அங்கிருந்த வெயிட்டர்களுக்கும் ஆங்கிலம் சரியாகத் தெரியவில்லை. கஷ்டப்பட்டு ஆர்டர் கொடுத்தார்கள்.

உணவு வரும்வரை இருவரும் ஹோட்டலை நோட்டமிட்டார்கள். அதில் மனைவிக்கு எம்பிராய்டரியில் ஆர்வம் அதிகம். டேபிளில் அடுக்கியிருந்த பாத்திரங்களில் இருந்த சீன சித்திர எழுத்துகளை ரசித்த அவள், அதை தனது போனில் படம் பிடித்துக் கொண்டாள்.

அடுத்த நாள் கணவனுக்கும் தனக்கும் இரண்டு டிஷர்ட்கள் வாங்கிய அவள், அவற்றில் இந்த எழுத்துகளை எம்பிராய்டரி செய்தாள். அடுத்த முறை அந்த ஹோட்டலுக்கு இந்த ஷர்ட்டில் இருவரும் வந்தார்கள். வெயிட்டர்களும் ஹோட்டல் பணியாளர்களும் அவர்களைப் பார்த்து

---

கிட்டத்தட்ட பாலைவனம் போன்ற மணல் பிரதேசம். கொளுத்தும் வெயிலில் கடுமையாக பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள் வீரர்கள். கமாண்டோ படைக்கான விசேஷ பயிற்சி அது. வீரர்கள் பயிற்சி எடுப்பதை தன் ஜீப்பில் அமர்ந்தபடி கண்காணித்துக் கொண்டிருந்தார் கமாண்டர். அவரது சீட்டுக்குப் பக்கத்தில் வயர்லெஸ் ரேடியோ செட் அலறிக் கொண்டிருந்தது.

பயிற்சி முடிந்தது. இப்போது அவர்கள் கையில் கனரக துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு இரண்டு கிலோமீட்டர் தூரம் ஓடவேண்டும். எல்லோரும் ஓடுவதற்குத் தயாரானபோது கமாண்டர் திடீரென, ''உங்களில் யாருக்கு வயர்லெஸ் ரேடியோ பற்றி நன்றாகத் தெரியும்?'' என்று கேட்டார்.

பலரும் கையைத் தூக்கினார்கள். ''நான் கம்யூனிகேஷன் எஞ்சினியரிங் படிச்சிருக்கேன் சார்'' என ஒருவர் சொல்ல, ''நான் எலெக்ட்ரானிக்கல் எஞ்சினியர் சார்'' என்றார் இன்னொருவர். ''நான் போலீஸ் கன்ட்ரோல் ரூம்ல வயர்லெஸ்கள்கூடவே வாழ்ந்திருக்கேன் சார்'' என்றார் இன்னொருவர். ''நான் பல வருஷமா பார்ட் டைமா ரேடியோ, வயர்லெஸ் ரிப்பேர் பார்த்திருக்கேன் சார்'' என மற்றொருவர் சீனியாரிட்டி காட்ட, ''நான் வயர்லெஸ் செய்யற கம்பெனியிலயே வேலை பார்த்திருக்கேன் சார்'' என்றார் கடைசி வரிசையில் இருந்த ஒருவர்.

ஜீப்பில் நிறைய இடம் காலியாக இருந்தது. வயர்லெஸ் எக்ஸ்பர்ட்டை கமாண்டர் தன் ஜீப்பில்

---

ஓர் இளைஞன் இருந்தான். அவனது தொழில் வித்தியாசமானது. அது, நாய்களுக்குப் பயிற்சி அளிப்பது. உயர்ரக நாய்களை வீட்டில் வாங்கி வளர்க்கும் பணக்காரர்கள், அந்த நாய்களுக்கு சில பயிற்சிகளைத் தர விரும்புவார்கள். வீட்டுக்குள் அசுத்தம் செய்யாமல் இருப்பது, குழந்தைகளோடு விளையாடுவது, பந்து, பேப்பர் போன்றவற்றை எடுத்துத் தருவது, ஏதாவது கெட்ட பழக்கங்கள் தொற்றிக்கொண்டிருந்தால் அதைத் தடுப்பது... இப்படி ஏராளமான விஷயங்கள் அடங்கியது இந்தப் பயிற்சி.

பல நாய்களுக்குப் பயிற்சி தரும் அவன், தன் வீட்டில் வளர்க்க ஒரு நாய் வாங்கி வந்தான். அதற்கும் அவன்தான் டிரெய்னர். கிட்டத்தட்ட ஒரு குழந்தையைப் போல அதை நேசித்துப் பயிற்சிகள் கொடுத்தான். ''பேச முடியாதே தவிர, நாம செய்யற எல்லா வேலைகளையும் இதுவும் செய்யும்'' என்று பெருமையாகச் சொல்வான்.

சமீப நாட்களாக அந்த நாய்க்கு ஒரு கெட்ட பழக்கம் தொற்றிக் கொண்டது. இவன் துணி துவைத்து கொடியில் காயப் போட்டால், எகிறிச் சென்று அந்தத் துணியை இழுத்து தரையில் போட்டுவிடும். செல்லமாக அதட்டியும் அது கேட்பதாக இல்லை. ஈரத்துணிகளை தரையில் இழுத்துப் போட்டு அழுக்காக்கி விடுவதால் பெரும் இம்சையாக இருந்தது. அவற்றை திரும்பவும் துவைப்பது இன்னும் பெரிய வேலையாக இருந்தது.

தன் முழுத் திறமையையும் பயன்படுத்தி நாய்க்கு இந்தக் கெட்ட பழக்கத்தை நீக்கும் பயிற்சி தந்தான் அவன். உடம்பு துடைக்கும் டவல் ஒன்றை கொடியில் போட்டான். நாய் அதை நெருங்கும்போது கோபத்தோடு

விநோதமாக சிரிப்பது போல தெரிந்தது. சாப்பிட வந்த கூட்டத்தில் இருந்த ஒரு தமிழ்ப்பெண்ணும் சிரித்தாள்.

''எல்லோரும் ஏன் சிரிக்கறாங்க?'' என அவளிடம் போய் விசாரித்தாள். ''உங்க டிஷர்ட்தான் காரணம். நீங்க எம்பிராய்டரி செய்திருக்கற வாசகத்துக்கு 'இது சைனா டவுன் ஹோட்டலில் திருடப்பட்டது'ன்னு அர்த்தம். பாத்திரங்களை யாரும் திருடக்கூடாதுன்னு எழுதி வச்சிருந்ததை அர்த்தம் தெரியாமல் காப்பி அடிச்சிருக்கீங்க'' என்றாள் அவள்.

அர்த்தமில்லாத முயற்சிகளைச் செய்யாதீர்கள்!



அருகில் உட்கார வைத்துக்கொள்வார். இன்றைக்கு மட்டுமில்லை... என்றைக்குமே கடுமையான பயிற்சியிலிருந்து விடுதலை பெறலாம் என்ற ஆசை எல்லோருக்கும் இருந்தது.

கையைத் தூக்கியவர்களில் ஒருவனைக் கூப்பிட்டார் கமாண்டர். எல்லோரும் அவனை பொறாமையோடு பார்த்தனர். ஆனால், தன் ஜீப்பிலிருந்த வெயிட்டான வயர்லெஸ் செட்டை எடுத்து அவனிடம் கொடுத்த கமாண்டர், ''இதோட சத்தம் ஒரே தலைவலியா இருக்கு! நீ இதையும் தூக்கிக்கிட்டு ஓடு. ஏதாவது முக்கியமான தகவல் வந்தா எனக்கு சொல்லு. நான் ஜீப்ல வர்றேன்'' என்றார். இப்போது எல்லோரும் அந்த சுமைதாங்கியைப் பார்த்து பரிதாபப்பட்டார்கள்.

தேவையற்ற எதிர்பார்ப்புகளை வைத்துக்கொண்டு எந்த முயற்சியையும் செய்யக்கூடாது.



திட்டினான். இப்படி நாய் துணியை எடுக்க முயற்சிப்பதும், அவன் திட்டுவதும் தொடர்ந்தது. இரண்டு வாரங்கள் கழித்து ஒருநாள் இப்படி துண்டைக் காயப் போட்டபோது நாய் அதை நெருங்கவே இல்லை.

நாய் திருந்திவிட்டது என மகிழ்ந்தான் அவன். அடுத்த நாள் வீட்டுக்குள் துணியைக் காயப் போட்டுவிட்டு வெளியில் போனான். திரும்பி வந்து பார்த்தால்... எல்லா துணிகளும் அழுக்கேறி தரையில் மூலைக்கு ஒன்றாகக் கிடந்தன. அந்த உடம்பு துடைக்கும் டவலை மட்டும் நாய் தொடவில்லை. அது கொடியில் பத்திரமாக இருந்தது.

தெளிவான முயற்சிகளே, நாம் விரும்பும் விளைவுகளைத் தரும்.



# வெற்றி தரும் குழு முயற்சி!

இன்றைய உலகில் யாருமே தனித் தீவு இல்லை. வேலை, தொழில், வியாபாரம் என்று எல்லா இடங்களிலும் ஜெயிப்பதற்கு கூட்டு முயற்சி தேவைப்படுகிறது. ஒருவர் கஷ்டப்பட்டு செய்யும் வேலையை எப்படி சுலபமாக முடிப்பது என்று இன்னொருவர் ஐடியா தருவார். ஒருவர் சொல்லும் புதுமையான யோசனை, ஒட்டுமொத்தமாக எல்லோருக்கும் முன்னேற்றத்தைக் கொடுக்கும்.

நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் ஒரு செல்போனின் பல பாகங்களும் வெவ்வேறு நாடுகளில் உருவாகி, ஏதோ ஓர் இடத்தில் அவை மொத்தமாகக் கோர்க்கப்பட்டு செல்போன் ஆகியிருக்கும். கார், பைக் என வாகனங்களும் இப்படித்தான். கூட்டுமுயற்சியின் வலிமை பெரிது.

ஒரு வைத்தியரும் அவர் மனைவியும் காட்டில் நீண்ட நாட்களாக எதையோ தேடிக்கொண்டிருந்தனர். கணவர் என்ன தேடுகிறார் என்று மனைவிக்குத் தெரியாது. வைத்தியரும் சொன்னதில்லை. வைத்தியர் அலைந்து திரிந்து எதையோ தேடுவார். அவர் ஏதாவது ஒரு செடியின் கிளையை எடுத்து சோதித்தால், அதுபோல இருக்கும் செடிகளை எடுத்துவந்து மனைவி காண்பிப்பார். அப்போதும், ''நான் தேடுவது இது இல்லை'' என்பாரே தவிர, எதைத் தேடுகிறோம் என்று சொல்ல மாட்டார். காட்டில் அலைந்து திரியும் வைத்தியருக்கு உணவு சமைத்து வைப்பது, பணிவிடைகள் செய்வது என்று மனைவி இருந்தார்.

இப்படியே ஆண்டுகள் கடந்தன. ஒருநாள் வைத்தியர் வழக்கம் போல காட்டுக்குள் அலைந்து திரிந்து விட்டு வரும்போது அங்கே மனைவியைக் காணவில்லை. அழகான இளம்பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். வைத்தியர் வந்ததும், ''சாப்பிடுகிறீர்களா?'' என்று கேட்டாள்.

வைத்தியருக்கு ஒன்றும் புரியவில்லை. ''யாரம்மா நீ?'' என்று கேட்டார். ''நான்தான் உங்கள் மனைவி. இப்படி மாறிவிட்டேன்'' என்றாள் அவள்.

வைத்தியருக்கு குழப்பம் ஏற்பட்டது. ''என்ன நடந்தது'' என்று கேட்க, மனைவி விளக்கினாள்.

''உங்களுக்காக கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தேன். காய்ச்சிய கஞ்சியைக் கலக்கும் கரண்டி உடைந்து விட்டது. அதனால், கீழே கிடந்த ஒரு குச்சியை எடுத்துக் கலக்கினேன். அந்தக் குச்சி பட்டதும் கஞ்சி கருப்பாகி விட்டது. அதை எடுத்து தனியே வைத்துவிட்டு உங்களுக்கு வேறு கஞ்சி காய்ச்சினேன். எனக்குப் பசித்ததால், கருகியிருந்த கஞ்சியைக் குடித்து விட்டேன். அதைக் குடித்ததும் எனது முதுமை போய் இப்படி இளம்பெண் ஆகிவிட்டேன்'' என்றாள்.

வைத்தியர் உற்சாகமாகி, ''எங்கே அந்தக் குச்சி? அதைத்தான் இத்தனைக் காலமாக தேடிக்கொண்டிருந்தேன்'' என்று பரபரத்தார். அந்த மனைவி அமைதியாக, ''அது கஞ்சியை கறுப்பாக்கிய ஆத்திரத்தில், உங்களுக்குக் கஞ்சி காய்ச்சும்போது அடுப்பில் வைத்து எரித்து விட்டேன்'' என்றாள்.

வைத்தியர் மயங்கி விழுந்தார். 'என்றும் மாறாத இளமையைத் தரும் அற்புத மூலிகையைத் தேடுகிறோம்' என்ற உண்மையை அவர் மனைவியிடம் சொல்லியிருந்தால், இப்படி ஆகியிருக்காது.



குழுவாக இணைந்து செய்யும் முயற்சிகளில் இப்படிப் பல விஷயங்கள் முக்கியம். அவை:

❖ ஒரு குழுவில் சிலர் முக்கியமானவர்களாக இருக்கலாம். சிலர் சாதாரண ஊழியர்களாக இருக்கலாம். ஆனால், எல்லோருக்கும் அங்கீகாரம் கொடுக்க வேண்டும். புதியவர்கள், இருப்பவர்களிலேயே ஜூனியர்கள் என்று எல்லோரையும் தட்டிக் கொடுத்து பாராட்டும்போது, மற்றவர்களுக்கும் உற்சாகம் பிறக்கும்.

❖ குழுவில் இருக்கும் ஒவ்வொருவரும் தன் பணி என்ன, தான் எதற்கெல்லாம் பொறுப்பு என்பதை அறிந்திருக்க வேண்டும். யாரும் சொல்லாமலேயே அவர்கள் தங்கள் வேலைகளைச் செய்வதற்குப் பழக வேண்டும்.



❖ குழுவில் ஒருவர் தன் வேலையை முடிக்க முடியாமல் தவிக்கும்போது, வேலைப்பளுவால் திண்டாடும்போது, மற்றவர்கள் அவருக்குக் கைகொடுக்க வேண்டும்.

❖ குழுவில் இருக்கும் எல்லோருமே, தங்கள் குழுவின் இலக்கு என்ன, அதை எத்தனை நாட்களில் முடிக்க வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

❖ தாங்கள் செய்யும் முயற்சியில், குழுவில் இருக்கும் எல்லோருக்கும் நூறு சதவிகித நம்பிக்கை இருக்க வேண்டும். 'இது நடக்குமா', 'இது நம்மால் முடியுமா' என்ற சந்தேகம் ஒரே ஒருவருக்கு இருந்தால்கூட, அது ஒட்டுமொத்தக் குழுவையே பாதிக்கும்.

❖ ஒரு குழுவாக செயல்படும் எல்லோருக்குள்ளும் தெளிவான தகவல்தொடர்பு இருக்க வேண்டும். எல்லோரும் அவர்களின் கருத்துகள், ஐடியாக்களை வெளிப்படையாகப் பகிர்ந்துகொள்ளும் சூழல் வேண்டும்.

❖ யாருக்கு என்ன சந்தேகம் எழுந்தாலும், அதை எல்லோரும் இணைந்து தீர்க்க வேண்டும். குழுவில் ஒருவருக்குக்கூட தங்கள் முயற்சி குறித்த சந்தேகம் இருக்கக்கூடாது.

❖ முடிவுகளை எல்லோரும் இணைந்தே எடுக்க வேண்டும். அதைச் செயல்படுத்துவதிலும் ஒற்றுமை வேண்டும்.

❖ ஒவ்வொருவரும் தங்கள் வேலையை ஈடுபாட்டுடன் செய்யும்போதுதான் பரஸ்பரம் நம்பிக்கை வளரும். 'நாம் மட்டும் கஷ்டப்பட்டு வேலை பார்க்கிறோம். மற்றவர்கள் ஜாலியாக இருக்கிறார்கள்' என்ற எண்ணம் ஒருவருக்குக்கூட வந்துவிடக் கூடாது.

❖ குழுவில் எல்லோரும் ஒரே மாதிரி இருக்க மாட்டார்கள். சிலர் சீக்கிரம் வருவார்கள்; வேலை நேரம் முடிந்ததும் போய்விடுவார்கள். சிலர் தாமதமாக வருவார்கள்; கூடுதல் நேரம் இருந்து வேலை பார்ப்பார்கள். இப்படி வித்தியாசங்களை ஏற்று அரவணைக்க வேண்டும்.

❖ வேலை, தொழில், வியாபாரம் என்று எதிலும் கூட்டு முயற்சி எதிர்பார்த்த விளைவுகளைத் தரவில்லை என்றால், எங்கே பிரச்னை என்று திறந்த மனதுடன் விவாதிக்க வேண்டும். சரியான திசையில்தான் போகிறோமா என்று அவ்வப்போது கூடிப் பேசி உறுதி செய்துகொள்ள வேண்டும்.

❖ குழுவின் செயல்பாடுகளை விமர்சனம் செய்யும் உரிமையை எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். சொல்லுகின்ற கருத்தை மட்டுமே ஆராய வேண்டுமே தவிர, 'இவருக்கு இதைச் சொல்ல என்ன தகுதி இருக்கிறது' என்று கோபப்படக்கூடாது. ●

## இயற்பியல் மேதை!

இங்கிலாந்தில் பிறந்த ஸ்டீபன் ஹாக்கிங், இளம் வயதிலேயே இயற்பியல், கணிதம் மற்றும் வானவியல் ஆராய்ச்சிகளில் ஆர்வம் காட்டினார். பட்டப் படிப்பை முடித்துவிட்டு அவர் பிஹெச்.டி ஆராய்ச்சி செய்த நேரத்தில் அவருக்கு ஒருவித நரம்பியல் கோளாறு ஏற்பட்டது. 'அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள் மட்டுமே அவர் உயிருடன் இருக்க முடியும்' என்று டாக்டர்கள் கணித்தனர். அந்த நோய் கொஞ்சம் கொஞ்சமாக அவரை வீல் சேரில் முடக்கியது. அவர் தன் பேச்சுத்திறனையும் இழந்தார். ஆனால், மரணத்தைத் தன்னை நெருங்க விடவில்லை ஹாக்கிங்.

வீல் சேரில் இருந்தபடியே இயங்கினார் அவர். தன் தாடை அசைவுகள் மூலம் பேச்சை வெளிப்படுத்தும் கருவி ஒன்றைப் பயன்படுத்த ஆரம்பித்தார். படிப்பையும் ஆராய்ச்சியையும் தொடர்ந்தார். டாக்டர்கள் சொன்ன கெடுவைத் தாண்டி 55 ஆண்டுகள் வாழ்ந்தார். புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 30 ஆண்டுகள் பேராசிரியராக இருந்த அவர், ஐன்ஸ்டீனுக்கு பிறகு இந்த உலகில் பிறந்த மாபெரும் இயற்பியல் மேதையாகக் கருதப்படுகிறார். விண்வெளியில் இருக்கும் கருந்துளைகள் பற்றிய அவரது ஆராய்ச்சி உலகப்புகழ் பெற்றது. 'காலத்தின் மிகச்சுருக்கமான வரலாறு' என்ற அவரது அறிவியல் நூல், உலகெங்கும் கோடிக்கணக்கானவர்களால் படிக்கப்பட்டது. அறிவியலில் சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு ஆதர்ச நாயகன், ஸ்டீபன் ஹாக்கிங்.





## மைதான ஹீரோ!

மார்வன் அட்டப்பட்டு. இலங்கை கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான வீரராக அறியப்படுபவர். அந்த அணியின் கேப்டனாக பல ஆண்டுகள் இருந்தவர். அந்த அணிக்காக முதல் சர்வதேச டெஸ்ட் போட்டியில் ஆடியபோது, இரண்டு இன்னிங்ஸிலும் அவர் பூஜ்ஜியமே எடுத்தார். அதனால் அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

## ஐ.ஏ.எஸ் நாயகி!

தன் 31 வயதில் ஐ.ஏ.எஸ் தேர்வில் ஜெயித்த ஈரா சிங்கால், 'இந்திய அளவில் சிவில் சர்வீஸ் தேர்வுகளில் முதலிடம் பிடித்த முதல் மாற்றுத் திறனாளி' என்ற பெருமையைப் பெற்றார். டெல்லியைச் சேர்ந்த ஈரா சிங்கால், சாதிக்கத் துடிக்கும் ஒவ்வொரு மாற்றுத் திறனாளிக்கும் மகத்தான ரோல் மாடல்.

முதுகுத்தண்டில் ஏற்பட்ட ஒரு நோய் காரணமாக, இயல்பான வளர்ச்சியைப் பெறவில்லை ஈரா. அவரது கைகளும் இயல்பாக இயங்காது. இவ்வளவு பாதிப்புகளுடன் இருக்கும் ஒருவருக்கு அரசு விதிகளின்படி கிளார்க், வங்கி அதிகாரி போன்ற எந்த வேலையும் கிடைக்காது. ஆனால், ஐ.ஏ.எஸ் தேர்வில் ஜெயித்து கலெக்டர் பதவி வகிக்க எந்தத் தடையும் இல்லை. இதை அறிந்த அவர், தன் முயற்சியால் அந்தக் கடினமான தேர்வில் இந்திய அளவில் முதலிடம் பிடித்து சாதித்தார். 2014 டிசம்பரில் அவர் ஐ.ஏ.எஸ் பதவியைப் பெற்றார்.

ஒரு முயற்சியைக் கைவிடுவது சுலபம். ஏதோ ஒன்றைச் செய்யும்போது எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்றால், அடுத்த நிமிடமே அதைக் கைவிடுவது மிகச் சுலபம். ஆனால், அதன்பிறகும் அதைத் தொடர்ச்சியாகச் செய்வதுதான் கடினம். அதற்கு

அடுத்த 21 ஆண்டுகள் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக ஆடியபிறகு மீண்டும் வாய்ப்பு கிடைத்தது. இந்த முறை முதல் இன்னிங்ஸில் பூஜ்யமே எடுத்தார். அடுத்த இன்னிங்ஸில் ஒரு ரன் எடுத்தார். மீண்டும் நீக்கப்பட்டார். 17 மாதங்கள் உள்ளூர்ப் போட்டிகளில் ஆடி தன்னை நிரூபித்தபிறகு மூன்றாவது வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. இம்முறையும் இரண்டு இன்னிங்ஸ்களிலும் அவர் எடுத்தது பூஜ்ஜியமே! சர்வதேசப் போட்டிகளில் விளையாடும் தகுதி அவருக்கு இல்லை என்று அணி நிர்வாகம் அவரை நிராகரித்தது.

மூன்று ஆண்டுகள் தொடர் முயற்சிக்குப்பிறகு அவருக்கு மீண்டும் அணியில் வாய்ப்பு கிடைத்தது. இம்முறை அவர் ஏமாற்றவில்லை. தொடர்ச்சியாக ரன்களைக் குவித்தார். அணியின் அடுத்த கேப்டனாகவும் ஆனார். மூன்று தோல்விகளுக்குப் பிறகும் மனம் தளராமல் செய்த முயற்சிகளே, அட்டப்பட்டு என்பவரை உலகம் அறிந்த நாயகன் ஆக்கியது. எப்போதும் முயற்சியைக் கைவிடாதீர்கள்.



## புற்றுநோயை வென்றவர்!

சைக்கிள் பந்தயத்தில் உலகப் புகழ்பெற்ற வீரனாக மாற வேண்டும் என்பது அந்த இளைஞனின் கனவு. ஆனால், 25 வயதிலேயே அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். அவர் உயிர் பிழைப்பதற்கு 40 சதவிகித வாய்ப்பு மட்டுமே இருப்பதாக டாக்டர்கள் சொன்னார்கள். வயிறு, நுரையீரல், மூளை என உயிர் காக்கும் உறுப்புகளில் புற்றுநோய்க் கட்டிகள் வந்திருந்தன. மூச்சுவிடவும், நடக்கவுமே சிரமப்பட்டார். பிறகு எங்கே சைக்கிள் ஓட்டுவது?

அம்மா அவருக்கு மூன்று மந்திரங்கள் சொல்லிக் கொடுத்தார். 'ஒவ்வொரு தடையையும் ஒரு வாய்ப்பாக நினை', 'கடின முயற்சியுடன் உழைத்தால், நல்ல விஷயங்கள் தாமாகவே நிகழும்', 'உன்னால் முடியாது என்று அடுத்தவர்கள் சொல்வதை எப்போதும் நம்பாதே'. இவ்வளவு பிரச்னைகளிலிருந்தும் தான் மீள்வோம் என நம்பினார் அவர். சிகிச்சைக்குப் பிறகு தன்னை கடும் முயற்சியால் மீட்டெடுத்தார். மீண்டும் பயிற்சி செய்ய ஆரம்பித்தார். சைக்கிள் ரேஸில் மிகவும் கடினமான பந்தயம் என்று கருதப்படும் 'டூர் டி பிரான்ஸ்' பந்தயத்தில் அதன்பின் ஏழு முறை தொடர்ச்சியாக அவரே உலக சாம்பியன் ஆனார். அவர், லேன்ஸ் ஆம்ஸ்ட்ராங்க். இன்றளவும் சைக்கிள் பந்தய வீரர்களின் கனவு நாயகன்.

மிகுந்த மன உறுதியும் போராட்ட குணமும் தேவைப்படும். நம்பிக்கை இழக்காமல், அர்ப்பணிப்புடன் முயற்சி செய்பவர்களின் கனவுகள் எப்போதுமே கைகூடும். வெற்றியின் ரகசியம் கடின உழைப்பு மட்டுமல்ல, பொறுமையுடன் செய்யும் முயற்சியும்தான். அதற்கு நம் கண்முன்னே நடமாடும் உதாரணம், ஐரா சிங்கால்.



‘‘அப்பா, எனக்கு வீட்டுக்குள் அடைந்திருக்க பிடிக்கவில்லை’’ என்றாள் நிலா. ‘‘வா, நம் காரில் ஊர் சுற்றி விட்டு வருவோம்’’ என்றார் அப்பா.

**அ**ப்பாவும் மகளும் நகரத்தைத் தாண்டி கிராமத்தை நோக்கி பயணம் செய்தார்கள். ‘‘இன்னும் கொஞ்ச தூரம் போகலாம்’’ என்றாள் நிலா. ‘‘சரி’’ என்று இன்னும் கிராமப்பகுதிக்குள் காரை செலுத்தினார் அப்பா. அது குறுகலான, ஒரே ஒரு கார் மட்டுமே செல்ல முடிகிற பாதை. நடுவில் ஒரு கல் இருந்தது. கல்லை அகற்றினால்தான் கார் போக முடியும்.

‘‘அப்பா, நான் கல்லைத் தூக்கிப் போடுகிறேன்’’ என்றாள் நிலா. ‘‘உன்னால் முடியுமா?’’ என்றார் அப்பா. ‘‘முடியும்’’ என்று இறங்கிப் போனாள் நிலா. கல்லைத் தூக்க முயற்சி செய்தாள். முடியவில்லை. நகர்த்த முயற்சி செய்தாள். முடியவில்லை. அப்பாவிடம் வந்து, ‘‘என் சக்தி அனைத்தையும் செலுத்தி கல்லை நகர்த்த முயற்சி செய்தேன். முடியவில்லை’’ என்றாள்.

‘‘அப்படியா? நிச்சயமாக உன் சக்தி அனைத்தையும் உபயோகப்படுத்தி விட்டாயா?’’ என்று கேட்டார் அப்பா. ‘‘ஆமாம்’’ என்றாள் அவள்.

‘‘உன் அப்பா நான் அருகில் இருக்கிறேன். என்னிடம் உதவி கேட்டிருக்கலாமே. நானும் உன் சக்தியில் ஒரு அங்கம்தானே?’’ என்றார் அப்பா.

நிலா விழித்தாள். ‘‘சக்தி என்பது நம் உடல் வலிமை, நம்மால் முடிந்த விஷயம் மட்டுமல்ல. மற்றவர்களின் உதவியைக் கேட்டு அவர்கள் சக்தியை ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்துவதும் வலிமைதான். எல்லா விஷயங்களையும் தனியாகச் செய்துவிட முடியாது. அடுத்தவர்களின் உதவியை சரியாகப் பயன்படுத்துவதுதான் உண்மையான வலிமையாகும்’’ என்று அப்பா சொன்னார்.

பிறகு அப்பாவும் நிலாவும் சேர்ந்து நகர்த்த, கல் நகர்ந்தது. காரை எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியாகக் கிளம்பினார்கள்.

தடைகளோ, குறுக்கீடுகளோ, பிரச்னைகளோ இல்லாத நிம்மதியான வாழ்க்கை வேண்டும் என்பதுதான் பலரின் விருப்பமாக இருக்கிறது. ஆனால், அப்படி ஓர் அமைதியான வாழ்க்கை யாருக்கும் அமைவதில்லை. இந்த உலகிலேயே மிகுந்த ஏழ்மையில் இருக்கும்

# தடைகளைத் தாண்டி முயற்சி செய்யுங்கள்!



ஒரு மனிதருக்கும் பிரச்னைகள் இருக்கும்; உலகின் மிகப்பெரிய பணக்காரருக்கும் பிரச்னைகள் இருக்கும். திருமணம் ஆகாதவருக்கு ஒருவகை பிரச்னை என்றால், திருமணம் முடித்தவர்களுக்கு வேறு வகை பிரச்னைகள் இருக்கும். வேலை இல்லாதவர்களுக்கு ஒருவகை பிரச்னை என்றால், வேலையில் இருப்பவர்களுக்கு வேறுவிதமான பிரச்னைகள் இருக்கும்.


எந்தப் பிரச்னை எதிரே வந்தாலும், நம் முயற்சிகளால் அவற்றை சமாளிக்கலாம். பிரச்னைகளைத் தீர்க்க என்ன செய்வது? நம் முன்னே மூன்று தீர்வுகள் இருக்கின்றன. முதல் தீர்வு, அந்தப் பிரச்னையைத் தீர்க்க வழி தேடுவது. இரண்டாவது தீர்வு, அந்தப் பிரச்னையை விலக்கிவிட்டுச் செல்வது. மூன்றாவது தீர்வு, அந்தப் பிரச்னையை ஏற்றுக்கொண்டு வாழ்வது. சூழலைப் பொறுத்து, நம் முயற்சியால் இந்த மூன்றில் ஒரு தீர்வைத் தேடலாம்.

பிரச்னைகள் எவ்வளவு பெரிதாக வந்தாலும், துணிச்சலும் பொறுமையுமாக அவற்றை எதிர்கொண்டால் எந்தப் பிரச்னையும் கரைந்து போகும். உணர்ச்சிவசப்படாமல், முடங்கிப் போகாமல் முயற்சிகளைத் தொடர வேண்டும்.

எவ்வளவு பெரிய வீடாக இருந்தாலும், கதவு சிறியதுதான். எவ்வளவு பெரிய கதவாக இருந்தாலும், பூட்டு சிறியதுதான். எவ்வளவு பெரிய பூட்டாக இருந்தாலும், அதன் சாவி சிறியதுதான். இவ்வளவு சிறிய சாவியை வைத்து அவ்வளவு பெரிய வீட்டைத் திறந்து செல்கிறோம். எவ்வளவு பெரிய பிரச்னைக்கும் தீர்வு இந்த சாவி போலவே எளிமையானதாகவே இருக்கும். சாவி இல்லாத பூட்டை மனிதர்கள் உருவாக்குவதில்லை. தீர்வு இல்லாத பிரச்னைகள் யார் வாழ்க்கையிலும் வருவதில்லை.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான கஷ்டங்களும் பிரச்னைகளும் வரும். சிலருக்கு வறுமை பிரச்னையாக இருக்கும். சிலருக்கு நோய்கள் பிரச்னையாக இருக்கும். சிலருக்கு கடன் தொல்லையே பெரும் பிரச்னையாக இருக்கும். இப்படி ஒவ்வொரு மனிதரையும் ஒவ்வொரு விதமான சோதனை வாட்டும். நிறைய பேர், 'எனக்கு மட்டும் வாழ்வில் ஏன் இத்தனை சோதனைகள் ஏற்படுகின்றன' என்று புலம்புவார்கள். கொஞ்சம் திரும்பி அடுத்தவர்களையும் பார்த்தால், 'மற்றவர்களும் நம்மைப் போன்றோ, நம்மை விட அதிகமாகவோ சோதனைகளை சந்திக்கிறார்கள்' என்பது புரியும்.

இருட்டான இடத்தில் சாவியைத் தொலைத்துவிட்டு, வெளிச்சம் இருக்கும் வேறொரு இடத்தில் அந்த சாவியைத் தேடிய முல்லா கதையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நிறைய பேர் இப்படித்தான். தங்களுக்கு ஏற்பட்ட பிரச்னைகளைத் தீர்க்கும் இடத்தை விட்டு விட்டு பல நேரங்களில் தீர்வுகளை வேறு எங்கோ தேடுகிறார்கள். எப்படிப்பட்ட



சூழலிலும் நாம் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கான தீர்வை நம்மிடம்தான் தேட வேண்டும். அதை விட்டுவிட்டு வெளியில் தேடுவதில் அர்த்தமில்லை.

நாம் என்ன தவறு செய்தோம்? எதனால் இந்தப் பிரச்னை ஏற்பட்டது? இதை இந்த நேரத்தில் தீர்க்கா விட்டால் என்ன விளைவுகள் ஏற்படும்? இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு என்னென்ன வழிகள் இருக்கின்றன? யார் யாரிடம் இதற்காக உதவி கேட்க வேண்டும்?

இப்படி நமக்குள் கேள்விகள் கேட்டால், தீர்வுகள் தானாகத் தெரிய ஆரம்பிக்கும். எல்லாவற்றுக்கும் தீர்வு ஒன்று இருக்கிறது. ஒரு வழி மூடினால், மாற்று வழிகள் பல உண்டு. தீர்வு இல்லாத சிக்கல் என்று எதுவுமில்லை. வாழ்க்கையில் தடைகள், சிக்கல்கள், பிரச்னைகள் ஏற்படுவது இயற்கையே. அவற்றைக் கண்டு பயந்து பின்வாங்குவது சரியில்லை; அவற்றை எதிர்கொள்வதே சிறந்தது.

கவலைப்படுவதால் மட்டுமே சிக்கல்களில் இருந்து விலக முடியாது. கவலையில் மூழ்கும்போது நம் கண்களுக்குத் தீர்வுகள் தெரியாமல் போய்விடும். அப்போது சிக்கல்கள் இன்னும் பெரிதாகி விடும்.

தீர்க்க இயலாத பிரச்னை என்று வாழ்க்கையில் எதுவுமில்லை. ஆனால் அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகளை அறியாமல்தான் நாம் துன்பத்தைக் கண்டு அஞ்சுகிறோம். எல்லா பூட்டுகளுக்கும் சாவி உண்டு, அனைத்து சிக்கல்களுக்கும் தீர்வு உண்டு. திறக்க முடியாத பூட்டுகள் எதுமில்லை, அதற்கு சரியான சாவியைத் தேடிப் பிடிக்கும் முயற்சி நம்மிடம் இருந்தால் போதும்.

# முயற்சிக்கு ஒரு காரணம் வேண்டும்!



ஊரில் திருவிழா நடக்கிறது. அந்த திருவிழாவில் ஒரு பயில்வான் வித்தை காட்டுகிறார். இரும்புக் கம்பியை கையால் வளைத்துக் காட்டுகிறார். கருங்கல்லைக் கையால் உடைக்கிறார். முடிவில் ஒரு எலுமிச்சை பழத்தைப் பிழிந்து சக்கையை மட்டும் மிச்சம் வைக்கிறார். ‘‘இந்த எலுமிச்சை பழ சக்கையிலிருந்து மேலும் ஒரு துளி எலுமிச்சை சாறை யாராவது பிழிந்து விட்டால் அவருக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு தருகிறேன்’’ என்று சவால் விடுகிறார் பயில்வான்.

ஊரில் உள்ள இளைஞர்கள் எல்லாம் வந்து பிழிகிறார்கள். சாறு வரவில்லை. பலசாலிகள் முயற்சி செய்கிறார்கள். ஒரு துளியைக் கூட சக்கையிலிருந்து சொட்ட வைக்க முடியவில்லை. கூட்டத்திலிருந்து ஒரு மெலிந்த நடுத்தர வயதுப் பெண் வந்தார். ‘இவரா எலுமிச்சை சக்கையிலிருந்து சாறு எடுக்கப் போகிறார்’ என்று ஊர் மக்கள் ஏளனம் செய்யும்போதே அவர் எடுத்துப் பிழிய ஆரம்பித்தார்.

இரண்டு நிமிட முயற்சிக்கு பிறகு ஒரு துளி எலுமிச்சை சாறு அதிலிருந்து வருகிறது. அனைவருக்கும் ஆச்சரியம். பயில்வானுக்கு அதைவிட ஆச்சரியம். ‘‘எப்படிம்மா இதை சாதித்தீர்கள்?’’ என்று பயில்வான் கேட்டார்.

‘‘நேற்று முதல் என் குழந்தைகள் சாப்பிடாமல் பட்டினியில் தவிக்கின்றன. அவர்களுக்கு நேர்மையான வழியில் உணவளிக்க பணம் தேவைப்படுகிறது. இந்த நினைப்பு மனதில் இருக்கும்போது, இந்த சாறு பிழிதல் என்ன, பெரிய மலையே இருந்தாலும் உடைத்துத் தூளாக்கிவிடுவேன்’’ என்றார் அந்தப் பெண். தாய் அன்பின் சக்தியையும், வீரியத்தையும் கண்டு ஊர் மக்கள் வியந்து பாராட்டினார்கள்.

எந்த முயற்சி செய்தாலும், அதற்கு ஒரு நேர்மையான காரணம் இருக்க வேண்டும். அந்தக் காரணமே உங்களை வழிநடத்தும். தோல்விகள், நெருக்கடிகளைத் தாண்டி அந்த முயற்சியை ஜெயிக்க வைத்துவிடும்.

ஓரிரு முறை முயற்சி செய்து விட்டு, ‘‘இதற்கு மேல் என்னால் முடியாது’’ என்று சொல்பவர்கள் சராசரி மனிதர்கள். ‘‘என் லட்சியத்தை எட்டும் வரை, முயற்சி செய்து கொண்டே இருப்பேன்’’ என்று

சொல்பவர்கள் சாதனையாளர்கள். தோல்வியால் துவண்டவர்களை இந்த உலகம் நினைவில் வைத்திருப்பதில்லை. வெற்றியாளர்களையே மக்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

தோல்வி என்றைக்கும் நிரந்தரமானதல்ல. நம்முடைய முயற்சிகளில், சில தோல்வியைத் தழுவலாம். ஆனால், முயற்சியே எடுக்காமல் விட்டு விட்டால், நம் வாழ்க்கையே தோல்வியில் முடியும். தோல்வி உங்களுக்கு புதிய உற்சாகத்தையும் உறுதியையும் கொடுக்க வேண்டுமே தவிர, விரக்தியைக் கொடுக்கக் கூடாது. யாருக்கும் முதல் முயற்சியிலேயே மிகப் பெரிய வெற்றி கிடைத்து விடுவதில்லை. தடைக்கற்களை முன்னேற்றத்துக்கான படிக்கற்கள் என்று நினைத்துக் கொள்ள வேண்டும்.

தோல்வியோ, பின்னடைவோ வரும்போது, நம்மை நாமே சில கேள்விகள் கேட்டுக்கொள்ள வேண்டும். 'இந்தத் தோல்வி அல்லது பின்னடைவுக்கு என்ன காரணம்? எங்கே தவறு நடந்தது? நான் இதிலிருந்து கற்றுக் கொண்ட பாடம் என்ன? இனிமேல் இந்த மாதிரி தவறு நிகழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?' என்பது போன்ற கேள்விகளே நம்மை மீட்கும்.

சாதனையாளர்கள், தங்களுடைய முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்று விடுவதில்லை. எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த எட்மண்ட் ஹிலாரி மற்றும் டென்சிங் இருவரும் தங்களின் முதல் முயற்சியிலேயே வெற்றி பெறவில்லை. தொடர் முயற்சிகளே அவர்களுக்கு வெற்றியைப் பரிசளித்தன.

உலகம் போற்றும் விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசனுக்கு இளம்வயதில் காது சரிவரக் கேட்காது. 'சரியான மக்கு' என்று ஆசிரியர்களால் முத்திரை குத்தப்பட்டு பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டார். தன் முயற்சியில் அவர் அறிவியல் அறிஞர் ஆனார். ஆயிரம் முறை புதுப்புது வழிகளில் முயற்சி செய்து, கடைசியாக மின்சார விளக்கைக் கண்டுபிடித்தார். அவரது தோல்விகள் கிண்டல் செய்யப்பட்டபோது, ''நான் ஆயிரம் வழிகளில் மின்சார விளக்கு எரியாது என்ற உண்மையை அப்போதெல்லாம் கண்டுபிடித்தேன்'' என்று பதிலளித்தார். முயற்சிகள் தவறலாம்; ஆனால் நாம் முயற்சி செய்யத் தவறக்கூடாது. 'எனது முயற்சிகள் என்னை கைவிட்டதுண்டு. ஆனால் நான் முயற்சியை ஒரு போதும் கை விட்டதில்லை' என்றார் தாமஸ் ஆல்வா எடிசன்.

தோல்வியடைந்து விடுவோமோ, அவமானப்பட்டு விடுவோமோ என்று பயந்தே பலர் முயற்சி செய்வதேயில்லை. எல்லா தோல்விகளும் அனைவரையும் ஒரே மாதிரி பாதிப்பதில்லை. 'பரவாயில்லை, எனக்கு இது ஒரு நல்ல பாடம்' என்று ஆக்கப்பூர்வமாக எடுத்துக் கொள்பவர்களை அது பாதிப்பதில்லை. எப்போதெல்லாம் பிரச்னை மற்றும் தோல்வியைச் சந்திக்க நேர்கிறதோ, அப்போது இரண்டு கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக் கொள்வோம். 'அதனால் என்ன? அடுத்து என்ன?' நல்ல வழி தானாகவே பிறக்கும்.

'உன்னால் இதைச் செய்ய முடியாது' என்று பிறர் சொல்லும் செயலை முழு முயற்சி எடுத்து செய்து காட்டுவதில் இருக்கிறது இன்பம். பல இலைகள் சேர்ந்ததுதான் ஒரு முட்டைக்கோஸ். அப்படித்தான் வெற்றியும். பல தோல்விகளின், பல அனுபவங்களின் தொகுப்புதான் வெற்றி. சரியான நோக்கத்துடன், நேர்மையான காரணத்துடன், முழுமனதாக முயற்சி செய்பவர்களுக்கு வெற்றி எட்டிப் பிடிக்கும் தூரத்தில் இருக்கிறது. ●

RAMRAJ காட்டன்

வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 6 இதழ் 5

நவம்பர் 2021

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

கே.ஆர்.நாகராஜன்

ஆசிரியர்

த.செ.ஞானவேல்

இதழாசிரியர்

வள்ளி

வடிவமைப்பு

உதயா

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

10/55, ராஜு தெரு,

மேற்கு மாம்பலம்,

சென்னை - 600 033

email: contacttharu@gmail.com

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by

K.R. NAGARAJAN,

Published from

10, Sengunthapuram

Mangalam Road,

TIRUPUR - 641 604.

Ph: 9842274137



# வழிகாட்டும் துணைகள்!

**வேலை, தொழில்,வியாபாரம், வாழ்க்கை என நீங்கள் எங்கு எந்த முயற்சியைச் செய்தாலும், உங்களுக்கு வழிகாட்டவும் உற்சாகப்படுத்தவும் சில மனிதர்கள் வேண்டும். எப்படிப்பட்ட மனிதர்கள் இதற்கு உதவுவார்கள்?**

❖ **உந்தித் தள்ளும் நண்பர்:** உங்களால் எந்த எல்லைக்குச் சென்று முயற்சி செய்ய முடியும் என உங்களின் முழுத்திறமையை உங்களுக்கு உணர்த்தும் நண்பர் ஒருவர் வேண்டும். உங்கள் திசை குறித்து, முயற்சி குறித்து, நீங்கள் தேர்வு செய்யும் வாய்ப்புகள் குறித்து கேள்விகள் கேட்டு உங்களை இவர் நெறிப்படுத்துவார்.

❖ **பாராட்டும் தோழமை:** உங்களின் சின்னச்சின்ன வெற்றிகளையும் பாராட்டி, உங்கள் தன்னம்பிக்கையை அதிகரித்து, உங்களை ஒரு வெற்றியாளராகக் கொண்டாடும் நண்பர் ஒருவர் எப்போதும் தேவை.

❖ **தோள் கொடுக்கும் துணை:** உங்களின் மகிழ்ச்சியான தருணங்கள் போலவே, துன்பமான நேரங்களிலும் உடன் இருக்கும் துணை. நீங்கள் சொல்லும் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டு, உங்களுக்கு ஆறுதலும் தீர்வும் சொல்லும் அந்தரங்க நண்பராக இவர் இருப்பார். உங்களின் ரகசியங்களை வெளியில் சொல்லி சங்கடப்படுத்தவும் மாட்டார்.


❖ **உற்சாக ஊற்று:** ஆயிரம் ரூபாய் சம்பாதிக்க நினைக்கும் இடத்தில், லட்ச ரூபாய்க்கான வாய்ப்பு இருப்பதை உங்களுக்கு சுட்டிக் காட்டுவார் இவர். உங்களுக்கு இவர் கொடுக்கும் உற்சாகமே, எதையும் சாதிக்கத் தூண்டும். உங்களுக்குள் நேர்மறை சிந்தனையை விதைத்து, தோல்வி பற்றிய அச்சமே வராமல் பார்த்துக்கொள்வார்.

❖ **வளமான வழிகாட்டி:** நீங்கள் ஜெயிக்கத் துடிக்கும் துறையில் ஏற்கனவே சாதித்த ஒருவர். தனது அனுபவங்களால் உங்களுக்கு வழிகாட்டுவார். எது சரியாக வரும், எது தவறாக முடியும் என்று உணர்த்துவார். தான் செய்த தவறுகளை நீங்களும் செய்துவிடாதபடி உங்களைப் பாதுகாப்பார்.

❖ **சாகச விரும்பி:** தினசரி வேலைகளில் மூழ்கி, ‘இதுவே எனக்குப் போதும்’ என்று நீங்கள் சராசரி வாழ்க்கையில் திருப்தி அடையும்போது, உங்களை அடுத்த கட்டத்துக்கு உந்தித் தள்ளும் நண்பர் இவர். பயத்தைக் கடந்து, எந்த எல்லைக்கும் சென்று முயற்சி செய்யலாம் என்ற சாகச எண்ணத்தை உங்களுக்குள் இவர் உருவாக்குவார்.

❖ **உண்மையான உறவு:** தவறான வழியில் செல்லும்போது உங்களை அன்பாகக் கண்டிப்பவர். நீங்கள் தவறுகள் செய்யும்போதும், ‘இதெல்லாம் ஒரு பெரிய விஷயமே இல்லை, இதிலிருந்து சுலபமாக மீண்டுவிடலாம்’ என்று ஆறுதல் சொல்பவர். மோசமான தோல்விகளுக்குப் பிறகும் உங்களுக்குத் துணையாக நிற்பவர்.

❖ **நகைச்சுவை நாயகர்:** எவ்வளவு துன்பத்தில் இருந்தாலும், சிலருடன் பேசினால் மனதுக்கு நிம்மதி கிடைக்கும். புது உற்சாகம் பிறக்கும். தங்களைச் சுற்றி இருக்கும் எல்லோரையும் தங்கள் நகைச்சுவை உணர்வால் சிரிக்க வைக்கும் இப்படிப்பட்ட ஒரு நண்பர் எப்போதும் தேவை. அவர் தரும் ஆறுதலே, எல்லாக் காயங்களுக்கும் மருந்து. தோல்வியை மறந்து புது முயற்சியைத் தொடர்வதற்கான ஆரம்பப் புள்ளி. ●


RAMRAJ
COTTON
A divine fold for you
Ramyyam®
KOVAI COTTON SAREES





RAMRAJ

# Littlestars®

## KURTA SET


SHIRT CRAFTED
FOR ALL SEASON
EMBRACE THE BREEZY HAPPINESS THIS FESTIVE SEASON WITH WHITE AND COLOUR LINEN PARK FABRIC, SHIRTS & TROUSERS
Available in 50+ Colours as plain and printed.
Crafted for the comfort
LINEN PARK™
LINEN DHOTIS • SHIRTS • FABRICS
A Premium Product from
RAMRAJ
Available at Company Showrooms & All leading Textile Shops


RAMRAJ
TOUCH OF HERITAGE
Srimad Bhagavad Gita Bhasya
RAMRAJ
ACHARYA
PANCHAKACHAM DHOTIS

# நாள் முழுக்க தொடரும் உற்சாகம்!

**காலையில் வேலையைத் தொடங்கும்போது இருக்கும் உற்சாகம், மதியத்துக்கு மேல் கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கும். இதனால் ஒரு நாளில் சில மணி நேரங்களே முழு முயற்சியுடன் தங்கள் வேலைகளைச் செய்கிறார்கள் பலர். தனிப்பட்ட முறையில் அவர்களின் முன்னேற்றமும், அவர்கள் வேலை அல்லது தொழில் செய்யும் நிறுவனத்தின் வளர்ச்சியும் இதனால் பாதிக்கப்படுகிறது. நாள் முழுக்க உற்சாகம் குறையாமல் முயற்சிகளைத் தொடர, சில வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்:**



● தினமும் 8 மணி நேரத் தூக்கம் அவசியம். நிம்மதியான ஓய்வே, அடுத்த நாளில் உங்களுக்கு சுறுசுறுப்பைக் கொடுக்கும். அதிகாலையில் 20 நிமிட நேர நடைப்பயிற்சி அல்லது உடற்பயிற்சி அவசியம். காலை உணவு ஆரோக்கியமாக இருந்தால், நாள் முழுக்க உழைப்பதற்கு சக்தி கிடைக்கும்.



● ஒரு நாளின் அதிகாலையில் அரை மணி நேரமாவது உங்களின் வளர்ச்சிக்காக செலவிடுங்கள். நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், அந்தத் துறை தொடர்பான புது விஷயங்களை அந்த நேரத்தில் படிக்கலாம். அல்லது மனதுக்கு நிம்மதியும் அமைதியும் தரும் புத்தகங்கள் படிக்கலாம்.



● இந்த நாளில் என்னென்ன வேலைகளைச் செய்வது என்பதைக் காலையிலேயே திட்டமிட்டுக் கொள்ளுங்கள். ஒவ்வொரு மணி நேரத்துக்கும் என்னென்ன வேலைகள் என்று பிரித்துக்கொள்ளுங்கள். திட்டமிடாத திடீர் வேலைகளும் வரக்கூடும். அதற்கும் நேரம் ஒதுக்குங்கள்.



● செய்வதற்குக் கடினமாக இருக்கும் வேலைகளை, காலையில் முதலில் செய்யுங்கள். 'இதையே முடித்துவிட்டோம். மற்ற வேலைகள் சாதாரணம்' என்ற எண்ணத்துடன் மற்ற வேலைகளை சுலபமாக முடிக்க முடியும்.



● ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்யாதீர்கள். எதையும் முழுமையாக முடிக்க முடியாமல் போய்விடும். ஒரு வேலையை முடித்துவிட்டு, மனதுக்கு சில நிமிடங்கள் ஓய்வு கொடுத்துவிட்டு, அதன்பின் அடுத்த வேலையில் இறங்கினால் உற்சாகமாகச் செய்ய முடியும்.



● தொலைபேசி அழைப்புகள், வாட்ஸ்அப் தகவல்கள், சமூக வலைதளங்கள், போன்றவை இடையில் சலனப்படுத்தாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அலுவலக நேரங்களில் அநாவசிய போன் அரட்டைகளைத் தவிர்ப்பதை வழக்கமாக்கிக் கொண்டால், சும்மா பேசும் நண்பர்கள் யாரும் அதன்பின் அந்த நேரங்களில் உங்களை அழைக்க மாட்டார்கள்.



● உங்களுக்கு மேலே இருப்பவர்கள் கூப்பிட்டுக் கேட்பதற்கு முன்பாக வேலைகளை முடிப்பதை வழக்கமாக்குங்கள். கேள்வி கேட்க யாருமில்லை என்றாலும்கூட, குறித்த நேரத்தில் வேலைகளை முடித்து, உங்களுக்கு நீங்களே பதில் சொல்லிப் பழகுங்கள். பொறுப்பு தானாக வரும்.



● எந்த மாதிரி விஷயங்கள் உங்கள் வேலைக்கு உதவுகின்றன என்று பார்த்து அவற்றை அதிகமாக்குங்கள். எதுபோன்ற விஷயங்கள் உங்கள் கவனத்தை திசை திருப்புகின்றன என்று பார்த்து, அவற்றைக் குறைத்துக்கொள்ளுங்கள்.



● சில நிமிடங்களில் முடிக்கிற வேலைகளை 'அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்' என்று தள்ளிப் போடாதீர்கள். இப்படி ஒவ்வொன்றாக சின்னச்சின்ன வேலைகள் சேர்ந்துகொண்டே வந்தால், நிறைய வேலைகள் பாக்கி இருப்பதைப் போன்ற எண்ணம் வந்துவிடும். அது உங்களின் செயல்திறனை பாதிக்கும். ●

ஒரு திரைப்படம் பார்க்கிறீர்கள். பார்வையற்ற பெண்ணாக ஒரு நடிகை நடித்திருக்கிறார். அவரைப் பார்க்கும்போது நடிப்பது போலத் தெரியவில்லை. நிஜமாகவே பார்வையற்றவராக வாழ்ந்திருக்கிறார். அடுத்து வேறு ஏதோ ஒரு படத்தில் அவரைப் பார்க்கும்போது, 'இவருக்குத்தான் பார்வை தெரியாதே' என்ற நினைப்பு நமக்குள் எழும். அவர் தனது வேலையை கூடுதல் முயற்சி எடுத்து செய்தார் என்பதற்கான அடையாளம் அது.

கிணறு தோண்டுபவர்களைப் பார்த்திருப்பீர்கள். ஆழமாகத் தோண்டிக்கொண்டே போவார்கள். ஒரு கட்டத்தில் தண்ணீர் சுரக்க ஆரம்பிக்கும். உடனே தோண்டுவதை நிறுத்த மாட்டார்கள். இன்னும் ஆழமாகத் தோண்டி நிறைய தண்ணீர் சுரப்பதை உறுதி செய்வார்கள். அதன்பிறகே தோண்டுவதை நிறுத்துவார்கள்.

சராசரி மனிதர்கள் ஒரே செயலை ஒரே மாதிரி திரும்பத் திரும்ப செய்துவிட்டு, வித்தியாசமான பலன்கள் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். வெற்றிகரமான மனிதர்கள் கூடுதல் முயற்சியை செலுத்தி தங்கள் செயல்களில் வித்தியாசம் காட்டுவார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு முறையும் கூடுதல் பலன்கள் கிடைக்கும்.

பலமுறை முயற்சி செய்தும் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்கவில்லை என்று முயற்சியைக் கைவிடுவது சரியல்ல. எல்லாவற்றிலும் எக்ஸ்ட்ராவாக எதையாவது எதிர்பார்க்கும் நாம், உழைப்பையும் எக்ஸ்ட்ராவாகக் கொடுக்க வேண்டும். நமது செயல்களில் நாம் செலுத்தும் முயற்சிகளைப் பொறுத்தே, அவற்றின் விளைவுகள் அமையும். அரைமனதோடு செய்யும் செயல்களில் அரைகுறையான பலன்களே கிடைக்கும். முழுமனதுடன் செய்யும் செயல்களே அதிசயங்களை நிகழ்த்தும். வேலை, தொழில், வியாபாரம், வாழ்க்கை, உடல்நலம், குடும்ப நலன், உறவுகள் என்று எல்லா இடங்களுக்கும் இது பொருந்தும்.

அரைகுறையாக ஒரு விஷயத்தை முயற்சி செய்துவிட்டு, 'நான் இதில் மிகச் சிறந்த உழைப்பைக் கொடுத்தேன். ஆனால், பலன் கிடைக்கவில்லை' என்று சொல்வது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் செயல். மிகச் சிறந்த பலன்களை நாம் எதிர்பார்க்கிறோம் என்றால், அதற்கு மிகச் சிறந்த முயற்சியை செலுத்த வேண்டும்.

மிகச் சிறந்த கூடைப்பந்து வீரராக அறியப்படுபவர் மைக்கேல் ஜோர்டான். குழுவாக விளையாடும் அந்த விளையாட்டில் ஒற்றை மனிதராக தன் அணிக்கு வெற்றி தேடித் தரும் வல்லமை மிக்கவர். அவரும் பல தோல்விகளைத் தன் வாழ்நாளில் கண்டிருக்கிறார். ''நான் ஒன்பதாயிரம் முறை கோல் போட முடியாமல் வாய்ப்பை வீணடித்திருக்கிறேன். 300 போட்டிகளில் தோற்றிருக்கிறேன். வெற்றிக்கான கோலைப் போடும் வாய்ப்பை 26 முறை அணி எனக்கு வழங்கியபோது, எல்லோருக்கும் ஏமாற்றம் தரும் விதமாக நான் தவறு செய்து அணி தோற்கக் காரணமாக இருந்திருக்கிறேன். வாழ்க்கையில் இத்தனை முறை சந்தித்த தோல்விகள்தான், ஒவ்வொரு முறையும் கூடுதல் முயற்சியைச் செய்ய வேண்டும் என்று என்னைத் தூண்டின. அதன்பிறகு நான் வெற்றிகரமான வீரராக உருவெடுக்கக் காரணமாக இருந்தன'' என்கிறார் அவர்.

நிறைய பேர் தங்கள் செயல்களில் கூடுதல் முயற்சியைக் கொடுப்பதில்லை. கடினமான செயல்களைச் செய்ய முயல்வதில்லை. அவர்களின் ஆழ்மனதில், 'இதை என்னால் சாதிக்க முடியாது' என்ற அவநம்பிக்கை வேரூன்றி இருக்கிறது. 'அதிர்ஷ்டசாலிகளும் வெற்றியை வரமாக வாங்கி வந்தவர்களும் மட்டுமே இதை சாதிக்க முடியும்' என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

பல்வேறு ஆய்வுகள் என்ன சொல்கின்றன தெரியுமா? 'ஒவ்வொரு சராசரி மனிதரும் இப்போது அவர்கள் செய்யும் செயல்களைப் போல 20 மடங்கு அதிகமான செயல்களைச் செய்யும் திறமை உள்ளவர்கள். இந்த உண்மை அவர்களுக்கே தெரிவதில்லை' என்று சர்வதேச மனநல நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். இதை நீங்கள் நம்பினால், உங்கள் வாழ்க்கையே மாறும். நீங்கள் இதுவரை செய்த செயல்களை அசை போட்டுப் பாருங்கள். ஒவ்வொன்றையும் இன்னும் அதிக முயற்சி செய்து, கூடுதல் உழைப்பைக் கொடுத்து சிறப்பாகச் செய்திருந்தால் உங்கள் வாழ்க்கை இப்போது எப்படி இருந்திருக்கும் என்பது புரியும்.

ஒவ்வொரு செயலையும், 'என் அறிவையும் திறமையையும் பயன்படுத்தி, என்னால் இயல்பாகச் செய்ய முடிந்ததைவிட கூடுதல் முயற்சியுடன் செய்கிறேன்' என்று நினைத்தபடி செய்ய வேண்டும். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைவிட, அதை எப்படிச் செய்கிறீர்கள் என்பது முக்கியம். ஒரு புகழ்பெற்ற சிற்பியிடம், ''உங்களால் எப்படி இத்தனை அற்புதமாக சிலைகளை செதுக்க முடிகிறது?'' என்று

# கூடுதல் முயற்சியைக் கொடுங்கள்!

கேட்டார்கள். அதற்கு அவர், ''நீங்கள் எல்லோரும் வெறும் கல்லை மட்டுமே பார்க்கிறீர்கள். நான் ஒவ்வொரு கல்லிலும் ஓர் உருவத்தைப் பார்க்கிறேன். அந்த உருவத்துக்குத் தேவையற்ற பகுதிகளை மட்டும் அந்தக் கல்லிலிருந்து வெட்டி எறிகிறேன். அவ்வளவுதான்'' என்று பதில் சொன்னார். இலக்குகளை நிர்ணயித்து முயற்சிகள் செய்வதில் இப்படிப்பட்ட தெளிவு வேண்டும்.

ஒவ்வொரு செயலையும் சிறப்பாகச் செய்யும்போது,



இந்த குணம் இயல்பாக வந்துவிடும். அதிகாலை உடற்பயிற்சியா? அதை சிறப்பாகச் செய்யுங்கள். காலை உணவை ருசித்து சாப்பிடுங்கள். எல்லோருக்கும் முன்பாக வேலையிடத்துக்குச் செல்லுங்கள். அங்கு எதைச் செய்தாலும் மற்றவர்கள் 100 சதவிகித முயற்சியைக் கொடுத்தால், நீங்கள் 110 சதவிகித முயற்சியைக் கொடுங்கள். எந்த விஷயத்துக்கும் போதுமான நேரம் கொடுத்து கூடுதல் முயற்சிகளைச் செய்தோம் என்ற மனநிறைவு கிடைக்கும்.

விளையாட்டு வீரர்களிடம் ஒரு விஷயத்தைக் கவனித்திருப்பீர்கள். அவர்கள் தங்கள் வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில் முக்கியமான சாதனையை நிகழ்த்தியிருப்பார்கள். அது அவர்களின் தனிப்பட்ட சாதனையாகக் கருதப்படும். ஆனால், முக்கியமான போட்டிகளுக்கு வரும்போது பதற்றமாகி அந்த சாதனை அளவை எட்ட முடியாமல் போய்விடும். ஏற்கனவே ஏதோ ஒரு கட்டத்தில் அவர்கள் செய்ததுதான். இந்த இடத்தில் அதைச் செய்ய முடியாமல் போய்விடும்.

டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம் வென்றார். அன்று அவருடன் போட்டியிட்ட மற்ற வீரர்களில் சிலர், அதற்குமுன் அவரைவிட பெரிய சாதனை புரிந்தவர்கள். ஆனால், ஒலிம்பிக் மைதானத்தில் வந்து அவர்களால் கூடுதல் முயற்சியைக் கொடுக்க முடியவில்லை. நீரஜ் சோப்ரா அந்த மிகப்பெரிய போட்டியில் கூடுதல் முயற்சியைக் கொடுத்தார். தேசத்துக்காக விளையாடுகிறோம் என்ற பெருமிதம் அவருக்குள் ஒரு மாயாஜாலத்தை நிகழ்த்தியது. அதுவே அவரை முயற்சி செய்ய வைத்து தங்கம் வென்று கொடுத்தது.

எந்த சிகரத்தின் உச்சியிலும் எல்லோருக்கும் இடம் இருக்கிறது. கூடுதல் முயற்சியை செலுத்தி நீங்கள் எப்போது உயரப் போகிறீர்கள்? ●



# கனவை நிஜமாக்கும் முயற்சி!

எலான் மஸ்க் இன்று ஒரு தொழிலதிபர். 2021 செப்டம்பர் மாதத்தில் இந்த உலகின் நம்பர் 1 பணக்காரர் ஆனார். அவரின் ஆரம்ப காலம் சாதாரணமானது. தென் ஆப்ரிக்கா நாட்டில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர், படிப்பதற்காக அமெரிக்கா வந்தார். 24 வயதில் ‘படித்தது போதும்’ என முடிவெடுத்து, சொந்தமாக ஒரு கம்ப்யூட்டர் நிறுவனம் தொடங்கினார். நான்கே ஆண்டுகளில் அதை 2,300 கோடி ரூபாய்க்கு விற்றார்.

அந்த வயதில் அது மிகப்பெரிய பணம். அதை வைத்து அவர் சொகுசு வாழ்க்கை வாழவில்லை. அடுத்ததாக ஒரு ஆன்லைன் வர்த்தக நிறுவனத்தை ஆரம்பித்தார். அவருக்கு 31 வயதாகும்போது அந்த நிறுவனத்தையும் விற்றார். அதில் அவர் பங்காக 1,200 கோடி ரூபாய் கிடைத்தது. இப்போதும் அவர் சொகுசு வாழ்க்கைக்கு ஆசைப்படவில்லை.

செவ்வாய் கிரகத்தில் மனிதர்களைக் குடியேற்றும் திட்டம் ஒன்று குறித்து அவர் கனவு கண்டார். இதற்காக சொந்தமாக ஒரு விண்வெளி நிறுவனம் தொடங்கினார். தான் இதுவரை சம்பாதித்த அத்தனை பணத்தையும் முதலீடு செய்து ராக்கெட் உருவாக்கினார். 2006ம் ஆண்டு அவர் நிறுவனம் முதலில் செலுத்திய ராக்கெட் வெடித்துச் சிதறியது. அடுத்த ஆண்டு இரண்டாவது முயற்சியும் தோல்வி. 2008ம் ஆண்டில் மூன்றாவது முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

அதன்பின் நான்காவது ராக்கெட்டை உருவாக்க மட்டுமே அவரிடம் பணம் இருந்தது. ஒருவேளை இதில் தோல்வி அடைந்தால் அவர் தெருவுக்கு வந்துவிடுவார். ஆனாலும் அவர் தன் முயற்சியைத் தொடர்ந்தார். அந்த முயற்சி ஜெயித்தது. விண்வெளியை எட்டிப் பிடித்த முதல் தனியார் நிறுவன ராக்கெட் அதுதான். அதன்பின் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசாவே இவரது ராக்கெட்களைப் பயன்படுத்திக் கொள்ள ஒப்பந்தம் போட்டது. படிப்படியாக பல நிறுவனங்களை உருவாக்கி, உலகின் முதல் வரிசைப் பணக்காரர் ஆனார் எலான் மஸ்க்.

வாழ்க்கையில் உண்மையான முயற்சிகளுக்கு சில அடையாளங்கள் இருக்க வேண்டும்.

- ஒவ்வொரு நாளும் புதிதாக ஏதோ ஒன்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். அது உங்களை வாழ்வில் சிறிதேனும் மேன்மைப்படுத்த வேண்டும்.
- உங்கள் வாழ்க்கையின் குறிக்கோளாக ஒன்று இருக்க வேண்டும். அதைச் செய்து முடிப்பதற்காகவே நீங்கள் வாழ்கிறீர்கள் என்ற உணர்வு வேண்டும்.
- சூழ்நிலை எப்படி மாறினாலும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் இழக்கக்கூடாது.
- எதிர்மறையான சூழலிலும் நேர்மறையான மனநிலையுடன் உழைக்க வேண்டும்.
- கடந்த காலத்தில் நிகழ்ந்த தவறுகளை நினைத்து வருந்தாமல், எதிர்காலத்தில் எல்லாவற்றையும் சரியாகச் செய்வது பற்றி யோசிக்க வேண்டும்.



- உங்கள் தவறுகளை உணர்ந்து, அவற்றை சரிசெய்ய வழி தேட வேண்டும்.
- உங்களிடம் மட்டுமே எதிர்பார்ப்பை வைக்க வேண்டும். உங்களுடன் மட்டுமே போட்டி போட வேண்டும்.
- வெற்றி தலைக்கும் தோல்வி மனதுக்கும் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- எவ்வளவு பெரிய கூட்டத்திலும் தனித்துத் தெரிய வேண்டும். ●

# தீபாவளி வழிபாடுகள்!

❖ செல்வத்தின் அதிபதி குபேரலட்சுமி. தீபாவளியன்றோ, அதற்கு முந்தின நாளோ குபேரலட்சுமியை வழிபட்டால் லட்சுமி கடாட்சம் உண்டாகும். வடமாநிலங்களில் வியாபாரிகள் தீபாவளி தினத்தில் லட்சுமி பூஜை செய்வர். தீபாவளியில் மட்டுமின்றி, வெள்ளிக்கிழமை காலை அல்லது மாலை சுக்கிர ஓரை நேரம் மற்றும் திரிதியை திதிகளில் குபேரலட்சுமியை பூஜிப்பது மிகுந்த நன்மை தரும்.

❖ செல்வம் பெருக்கும் லட்சுமி குபேர பூஜையும் தீபாவளியின் சிறப்பு அடையாளம். பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் விரதம் இருந்து லட்சுமி குபேர பூஜை செய்யலாம். தீபாவளி அன்று அதிகாலையில் கங்கா ஸ்நானம் செய்த பிறகு, பூஜையறையில் லட்சுமி குபேரர் படம் மற்றும் குபேர யந்திரத்தை கிழக்கு அல்லது மேற்கு திசை பார்த்தபடி வைத்து, இந்த பூஜையைச் செய்ய வேண்டும். முறைப்படி பூஜை செய்து, பிள்ளையார் மந்திரம், அஷ்டோத்திரம், மகாலட்சுமியின் ஸ்தோத்திரப் பாடல்களை பாராயணம் செய்ய வேண்டும். தொடர்ந்து, குபேர துதியைச் சொல்லி வழிபட வேண்டும். துதி தெரியாதவர்கள், ‘குபேராய நம... தனபதியே நம...’ என்று துதித்து, உதிரிப் பூக்களை கலசத்தின் மீது போட்டு அர்ச்சனை செய்யலாம். லட்சுமி குபேர பூஜை செய்வதால், கடன் பிரச்னைகளில் இருந்து விடுபடலாம். நம் இல்லத்தில் செல்வம் பெருகும் என்பது நம்பிக்கை.

❖ தீபாவளி அன்று குபேர பகவானுக்கு நாணய வழிபாடு செய்வதும் மிகமிக விசேஷம். குபேர பகவானுக்கு உகந்த எண் ஐந்து. ஒரு



தட்டில் நம் கை நிறைய ஐந்து ரூபாய் நாணயங்களைப் போட்டு, அதைத் தட்டில் இருந்து நம் இரு கைகளாலும் அள்ளி எடுப்பதும், மீண்டும் தட்டில் போடுவதுமாக இந்த வழிபாட்டைச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால், நாணயங்களில் இருந்து ஒலி எழும். அப்போது, ‘அளகாபுரி அரசே போற்றி’ என்று துவங்கும் குபேர பகவானின் 108 போற்றிகளைச் சொல்லி வழிபட வேண்டும். 108 போற்றிகளையும் சொல்லி முடிக்கும் வரை நாணயங்களை அள்ளி எடுப்பதும், மீண்டும் தட்டிலேயே போடுவதுமாக இருக்க வேண்டும். இந்த நாணய வழிபாடு, நிலையான செல்வத்தை நமக்கு அருளும் என்பது நம்பிக்கை.

❖ ஈசனை அடைய பார்வதி தேவி கடைபிடித்த விரதம், கேதார கௌரி விரதம். இந்த விரதத்தால் மகிழ்ந்த ஈசன், தேவிக்கு தனது திருமேனியில் இடபாகத்தைத் தந்து அர்த்தநாரீஸ்வரராக அருள்பாலித்தார். ஐப்பசி தேய்பிறைச் சதுர்த்தசியில் தீபாவளி அன்று இந்த விரத பூஜையை சுமங்கலிகள் அனுஷ்டிக்கலாம். 21 என்ற எண்ணிக்கையில் பட்சணங்கள் படைத்து வழிபடுதல் விசேஷம். பூஜையின் முக்கிய அம்சம் நோன்புச்சரடு. பூஜிக்கப்படும் நோன்புச்சரடை மூத்த சுமங்கலிகள் மற்றவர்களுக்குக் கட்டிவிட வேண்டும். பிரிந்த தம்பதி ஒன்றுசேர, தாம்பத்தியம் சிறக்க, மாங்கல்ய பலம் பெருக, நினைத்தது நினைத்தபடி நிறைவேற வரம் அருளும் வல்லமை இந்த விரதத்துக்கு உண்டு. ●

# அறிவுத் திருக்கோயில் நிகழ்ச்சியில் ராம்ராஜ்!

கோவை மாவட்டம் ஆழியாரில் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய அறிவுத் திருக்கோயிலுக்கு 221021 அன்று Zoho Corporation நிறுவனர் பத்மஸ்ரீ திரு. ஸ்ரீதர் வேம்பு வருகை புரிந்தார். அங்கு அடிப்படைப் பயிற்சி மற்றும் பிரம்மஞான பயிற்சி பெறும் அன்பர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார். அதன்பின் அறிவுத்திருக்கோயில் வளாகத்தை சுற்றிப் பார்த்தார். ஆழியார் அறிவுத்திருக்கோயில் தலைவர் திரு. எஸ்.வி.பாலசுப்ரமணியம், உலக சமுதாய சேவா சங்கத் துணை தலைவரும் ஆழியார் அறிவுத்திருக்கோயில் இணை நிர்வாக அறங்காவலருமான திரு. எம்.சின்னசாமி, உலக சமுதாய சேவா சங்கத் துணைத் தலைவரும் ராம்ராஜ் காட்டன் நிறுவனருமான திரு. கே.ஆர்.நாகராஜன், உலக சமுதாய சேவா சங்கத் துணைத் தலைவர் திரு. வே.சுந்தர்ராஜ் மற்றும் இயக்குனர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திரு. ஸ்ரீதர் வேம்புவை வரவேற்று, வேதாத்திரி மகரிஷி அவர்களின் நூல்களை நினைவுப்பரிசாக வழங்கும் நிகழ்வில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் உரையாற்றினார்.



# உழவர் உற்பத்தியாளர் விழாவில் ராம்ராஜ்!

தென்னை விவசாயிகள் தென்னை மரத்திலிருந்து கிடைக்கும் பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்ய முடியும். குறிப்பாக நீரா பானம் அதிக லாபம் தரும். இதன் மூலம் உழவர்களே உற்பத்தியாளர்களாக மாறி லாபம் ஈட்ட முடியும். இதன் அடிப்படையில் உலக தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டில் இந்த நிறுவனத்தில் 1,200 பங்குதாரர்கள் இணைந்திருக்கிறார்கள். ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் இதன் இயக்குனராக இருக்கிறார்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் நகரில் இந்த உலக தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் இரண்டாம் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் நடந்தது. இயக்குனர் திரு. சக்திவேல் தலைமை வகித்தார். இணை நிர்வாக இயக்குனர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் வரவேற்றார். இயக்குனர்கள் 'ராம்ராஜ் காட்டன்' நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் மற்றும் 'தி சென்னை சில்க்ஸ்' நிர்வாக இயக்குனர் திரு. பி.கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசினர்.

நிர்வாக இயக்குனர் திரு. பாலசுப்ரமணியன், ''தென்னையிலிருந்து பெறப்படும் சுத்தமான பானம் நீரா. மருத்துவ குணங்கள் கொண்டது. நீராவை ஆறு மாதம் வரை வைத்திருந்து பயன்படுத்தலாம் என மத்திய அரசு நிறுவனம் சான்றளித்துள்ளது. வெளிநாடுகளுக்கு இதை ஏற்றுமதி செய்ய முயற்சி செய்கிறோம். உலக தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் சார்பில் பெறப்படும் நீரா பானத்தின் விற்பனையை, உழவர் தினத்தன்று துவங்க திட்டமிட்டுள்ளோம்'' என்று உரையாற்றினார்.






# டாடா நிறுவனத் துவக்க விழாவில் ராம்ராஜ்!

திருப்பூரில் TATAAIA லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் முதல் VISTAAR கிளைத் திறப்பு விழா நடைபெற்றது. ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, இந்த அலுவலகத்தைத் திறந்து வைத்தார். திருப்பூருக்கு பெருமை சேர்க்கும் இந்த நேரடிக் கிளையின் பணிகளையும் துவங்கி வைத்தார். திரு. கே.ஆர்.நாகராஜன் தனது பெயருக்கான லைஃப் இன்சூரன்ஸ் காப்பீட்டுத் தொகையை ரூ.50 லட்சத்திற்கான காசோலையாக திருப்பூர் TATAAIA லைஃப் இன்சூரன்ஸ் பிளான்னர் திரு. கே.எஸ்.சுந்தரரத்தினம் மூலமாக டாடா நிறுவன மண்டல மேலாளர் திரு. ராஜேஷிடம் வழங்கினார்.

திரு. ரத்தன் டாடா 41 பெரிய நிறுவனங்களுக்குத் தலைவராகப் பொறுப்பேற்று, தனது அயராத உழைப்பின் காரணமாக இன்று 95 நிறுவனங்களாக விரிவாக்கம் செய்ததைக் குறிப்பிட்டுப் பாராட்டிய திரு. கே.ஆர்.நாகராஜன், ''மாபெரும் தன்னம்பிக்கை உள்ள தொழிலதிபர் அவர். வியக்கத்தகுந்த பெருந்தகையாளர். உலகம் முழுதும் ஏழரை லட்சம் தொழிலாளர் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை கொடுத்துக் கொண்டிருப்பவர்'' என்று தெரிவித்தார்.

''திருப்பூர் மிகப்பெரிய சரித்திரத்தைக் கொண்ட மாநகரம். அதைப் போல வேட்டி என்றால் உடனடியாக நம் எண்ணத்தில் தோன்றுவது ராம்ராஜ் காட்டன் வேட்டிகள். இளம்வயதிலேயே தனது கனவாகிய தொழில்துறையில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வத்தில் திருப்பூர் வந்து அயராத உழைப்பினால் முன்னுக்கு வந்தவர் திரு. கே.ஆர்.நாகராஜன். காந்திய வாழ்க்கையை முழுமையாக உள்வாங்கி, சத்தியம், அன்பு, நேர்மை, ஒழுக்கம் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டு, 'உழைப்பே உயர்விற்கு வழி' என்ற பாதையில் பயணித்து வெற்றிக் கொடி நாட்டியவர்'' என்று திரு. கே.ஆர்.நாகராஜனை TATA AIA லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தினர் பாராட்டினர்.








நாம் மிகச் சிறந்த முயற்சியைக் கொடுத்து உழைக்கும்போது, பல சமயங்களில் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. யாருடைய பாராட்டும் கிடைக்காது. அந்த உழைப்பை அங்கீகரிக்க வேண்டியவர், கண்டுகொள்ளாமல் இருப்பார். இதனால் பெருத்த ஏமாற்றம் ஏற்படும். அதன்பின் பலர் சிறந்த முயற்சிகளைச் செய்வதைத் தவிர்த்துவிடுவார்கள். சில வேலைகளைச் செய்யாமலே தவிர்த்துவிடுவோம். 'இந்த வேலைக்கு இவ்வளவு உழைத்தால் போதும்' என்பது போன்ற அலட்சியம் வந்துவிடும்.

சில இளைஞர்கள் இணைந்து நடத்திய இசைக்குழு ஒன்று இருந்தது. ஒவ்வொரு ஊராகச் சென்று சில நாட்கள் தங்கியிருந்து இசை நிகழ்ச்சிகள் நடத்துவார்கள். நிகழ்ச்சியைப் பார்க்க வரும் மக்கள் கொடுக்கும் கட்டணமே அவர்களின் வருமானம். முன்வரிசைக்கு அதிக கட்டணமும், பின்வரிசைக்குக் குறைந்த கட்டணமும் வசூலிப்பார்கள். ஒரு ஊரில் வருமானம் குறைய ஆரம்பிக்கும்போது, அடுத்த ஊருக்குச் சென்றுவிடுவார்கள்.

அப்படி ஒருமுறை ஒரு நகரத்துக்குச் சென்றார்கள். அந்த நகரத்தில் வழக்கத்துக்கு மாறாக அவர்கள் நிகழ்ச்சிக்கு வரவேற்பு குறைவாக இருந்தது. முதல் நாளே சரியான கூட்டம் வரவில்லை. குறைந்த கட்டண டிக்கெட்டுகள் மட்டுமே விற்றன. அடுத்தடுத்த நாட்களில் இது இன்னும் மோசமானது. கிடைக்கும் வருமானத்தைவிட, அங்கு தங்கியிருப்பதால் ஆகும் செலவு அதிகமானது. அது பனிக்காலம் என்பதால், இசை நிகழ்ச்சி நடத்தும் இரவு நேரத்தில் வீதிகளில் மக்கள் நடமாட்டமே குறைந்தது.

ஒரு வாரம் ஆனதும் அந்த இளைஞர்கள் உட்கார்ந்து பேசினார்கள். ''இந்த ஊரில் யாருக்கும் இசையை ரசிக்கத் தெரியவில்லை. இப்படி ஒரு ஊருக்கு வந்ததே தப்பு'' என்றார் ஒருவர்.

''இன்றைய நிகழ்ச்சியையே நடத்தாமல் இங்கிருந்து கிளம்பிப் போய்விடலாம். இன்று நிகழ்ச்சிக்கு 50 டிக்கெட்தான் விற்றிருக்கிறது. இதற்காக நிகழ்ச்சி நடத்தினால் நமக்கு இன்னும் நஷ்டம் அதிகமாகும்'' என்றார் இன்னொருவர்.

''ஆமாம், நிகழ்ச்சியை ரத்து செய்துவிட்டு அவர்களிடம் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடலாம்'' என்றார் மூன்றாமவர்.

''நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருக்கும் அரங்குகளில் இசை நிகழ்ச்சிகளை நடத்திப் பழகிவிட்டு, இப்படி 50 பேருக்கும் 75 பேருக்கும் நிகழ்ச்சி நடத்துவது ஏமாற்றமாக இருக்கிறது'' என்று வேறொருவர் சொன்னார்.

''ஆமாம், கொஞ்சம் பேருக்காக ஏன் நம் உழைப்பை வீணடிக்க வேண்டும்?'' என்று கேட்டார் இன்னொருவர்.

எல்லோரும் இப்படி ஆதங்கத்துடன் விவாதம்

# எப்போதும் சிறப்பாகச் செய்யுங்கள்!



செய்வதை, இசைக்குழுவின் தலைவர் அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தார். கடைசியில் எல்லோரும் அவரைப் பார்த்து, ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டனர்.

அவர் நிதானமாக தன் கருத்தைச் சொன்னார். ''நீங்கள் எல்லோரும் ஏமாற்றத்தில் இருக்கிறீர்கள். நானும் உங்களைப் போலவே ஏமாற்றம் அடைந்துள்ளேன். ஆனால், அதற்காக இப்படி ஒரு முடிவெடுப்பது தவறு. வருபவர்கள் 50 பேரோ, ஆயிரம் பேரோ, அவர்கள் நம் இசை நிகழ்ச்சியை ரசிக்க வருகிறார்கள். நம் மிகச்சிறந்த இசையை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். நிறைய பேர் வரவில்லை என்பது, வரும் ஒரு சிலரின் தவறு இல்லையே? வராதவர்களை நினைத்து ஏங்கி, வந்தவர்களை ஏன் தண்டிக்க வேண்டும்? ஒரே ஒரு ரசிகர் வந்தாலும், அவருக்கு நமது உன்னதமான இசையை வழங்க வேண்டும். அதுதான் நியதி'' என்றார்.

குழுத் தலைவர் சொன்னதைக் கேட்டு எல்லோரும் அமைதியானார்கள். அன்று இரவு அவர்கள் நடத்திய இசை நிகழ்ச்சி, அவர்களின் வாழ்க்கையிலேயே மிகச் சிறந்த நிகழ்ச்சியாக அமைந்தது. எல்லோருமே தங்களின் முழுத் திறமையைக் காட்டினார்கள். வந்திருந்த அனைவரும் கைத்தட்டி ரசித்துவிட்டு கிளம்பிப் போனார்கள்.

இசைக்கலைஞர்கள் எல்லோரும் தங்கள் தங்குமிடத்துக்குக் கிளம்பத் தயாரான நேரத்தில், குழுத் தலைவர் பரபரப்பாக வந்தார். 'வாசலில் நின்றிருக்கும் காவலாளியிடம் கொடுக்கப்பட்ட கடிதம் இது' என்று ஒரு கடிதத்தைப் படித்துக் காட்டினார். 'நான் இந்த நாட்டின் மன்னர். மாறுவேடத்தில் நகர்வலம் வந்தபோது உங்கள் இசை நிகழ்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டு உள்ளே வந்தேன். என் வாழ்நாளில் இப்படி ஒரு சிறந்த இசை நிகழ்ச்சியை ரசித்தது இல்லை. உங்கள் திறமைக்கு மரியாதை செய்ய விரும்புகிறேன். நாளை அரண்மனைக்கு வந்து ஒரு இசை நிகழ்ச்சியை நடத்துங்கள்' என்று அதில் எழுதியிருந்தது.

மன்னர் வந்திருக்கிறார் என்பது அவர்களுக்குத் தெரியாது. என்றாலும், அன்றைய தினத்தில் அவர்கள் மிகச் சிறந்த இசையை வழங்கினார்கள். வந்திருக்கும் ஒவ்வொருவரையும் முக்கியமாகக் கருதி அவர்கள் நிகழ்ச்சி நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில் மன்னரும் இருந்தது அவர்களின் அதிர்ஷ்டம். ஒருவேளை அவர் வராவிட்டாலும் அந்த நிகழ்ச்சி சிறப்பாகவே இருந்திருக்கும். ஏனெனில், ஒவ்வொரு ரசிகரையும் முக்கியமாக மதித்து நிகழ்ச்சி நடத்தும் மனநிலைக்கு அவர்கள் வந்திருந்தார்கள்.

நாம் ஒவ்வொரு முயற்சியைச் செய்யும்போதும் இப்படிப்பட்ட மனநிலைதான் நமக்கு வேண்டும். 'நாம் மிகச்சிறந்த பொருளைத் தருகிறோம். ஆனால், தரமற்ற பொருளை வாங்குவதற்குத்தான் மக்கள் கூட்டம் குவிகிறது' என்று விரக்தி அடையக் கூடாது. 'நாம் எல்லோரையும்விட அதிகமாக உழைக்கிறோம். ஆனால், சராசரியான பணியாளர்களுக்குக் கிடைக்கும் பாராட்டுகூட எனக்குக் கிடைக்கவில்லையே' என்று ஏமாற்றம் கொள்ளக்கூடாது. அதிகாலை சூரியனின் ஒளியை பனித்திரை சில நிமிடங்கள் மறைக்கலாம். ஆனால், அதைத் தாண்டி சூரியனின் வெளிச்சம் நம்மிடம் வந்தே தீரும். அப்படி தரத்துக்கும் உழைப்புக்கும் உரிய மரியாதை கண்டிப்பாகத் தேடிவரும்.

அடுத்தவரின் பாராட்டு பெறுவதற்காக மட்டுமே உழைத்தால், அதற்கு அர்த்தமில்லை. எதைச் செய்தாலும், நம் மனதுக்கு நிறைவு கிடைக்கும்விதமாக முழுமுயற்சியுடன் செய்ய வேண்டும். நமக்குள் இருக்கும் மன்னருக்கு நிறைவு கிடைத்துவிட்டால், அந்த வேலை எல்லோரின் கவனத்தையும் கண்டிப்பாகப் பெறும்.

நாம் எதைச் செய்தாலும், நம் கண்களுக்குத் தெரியாத யாரோ ஒருவர் அதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வுடன் முழுமையாகச் செய்வோம். அதற்கு அங்கீகாரம் கிடைக்கிறதா, அது மதிக்கப்படுகிறதா, பாராட்டு பெறுகிறதா என்றெல்லாம் கவலைப்படுவதைத் தவிர்ப்போம். 'இவர் எப்போதும் எதையும் முழு முயற்சியுடன் சிறப்பாகச் செய்பவர்' என்ற அடையாளம் ஒரு கட்டத்தில் நமக்கு வந்தே தீரும். அது நம் வாழ்வையே மேன்மையானதாக மாற்றும். ●



சிலர் மட்டும் சிகரங்களை எட்டிப் பிடிப்பதற்கான காரணம், அடுத்தவர்கள் ஓய்வெடுக்கும் நேரத்தில்கூட அவர்கள் முயற்சி செய்துகொண்டே இருப்பதுதான்.

நேர்மறையான செயல்பாடும் தளராத முயற்சியும் உங்களிடம் இருந்தால், உங்களைச் சூழ்ந்திருக்கும் அத்தனை பிரச்னைகளையும் தாண்டி உங்களால் முன்னேற முடியும்.

உங்கள் செயலின் விளைவுகளை உங்களால் தீர்மானிக்க முடியாது. ஆனால், உங்கள் கவனமும் முயற்சியும் தெளிவாக இருந்தால், உங்களால் அந்த விளைவுகளைத் தீர்மானிக்க முடியும்.

வெற்றி என்பது ஓர் ஏணி. கைகளைப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டு சொகுசாக அதில் ஏற முடியாது. முயற்சி வேண்டும்.

பெரிய செயல்களைச் செய்து முடிக்க, மகத்தான தியாகங்கள் தேவை. தியாகங்கள் செய்து முயற்சி எடுக்காதவர்களால் பெரிய செயல்களை சாதிக்க முடியாது.

எல்லாமே எதிராக இருந்தாலும், எல்லோரும் எதிர்மறையாகப் பேசினாலும், நீங்கள் நம்பும் ஒரு விஷயத்தில் உங்களுக்குத் தெளிவு இருந்தால் போதும். உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும்.

'இது முடியாது' என்று ஏளனம் செய்தவர்களின் குரலைக் காதில் வாங்காமல், தொடர்ச்சியாக முயற்சி செய்தவர்களால் மட்டுமே இந்த உலகில் மகத்தான சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

ஒவ்வொரு மனிதனும் இறந்துபோவது உண்மைதான். என்றாலும், அவனோடு அவனுடைய முயற்சிகளும் அவன் தொடங்கிய செயல்களும் மறைந்துபோய்விடுவதில்லை.

உங்கள் போன், லேப்டாப் என்று ஒவ்வொன்றையும் தினமும் சார்ஜ் செய்ய வேண்டியிருக்கிறது. உங்களையும் புத்துணர்வுடன் ரீசார்ஜ் செய்தால், முயற்சி முழுமையாகத் தொடரும்.

திறமை இல்லாதவர்களின் முயற்சி பெரிய பலன்களைத் தருவதில்லை. ஆனால், திறமை இருந்தும் முயற்சி செய்யாதவர்களுக்கு எதுவுமே நடப்பதில்லை.

யாராவது தங்கள் வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை என்று சொன்னால், அவர்கள் தம் வாழ்வில் புதிய முயற்சிகளை செய்து பார்த்ததில்லை என்று அர்த்தம்.

முயற்சி எடுத்து உழைக்கத் தயாராக இல்லாதவர்களின் திட்டங்களும் கனவுகளும் ஒருபோதும் நிறைவேறுவதில்லை.

வெற்றியும் தரமும் ஒரு விபத்து போல நிகழ்வதில்லை. புத்திசாலித்தனமான முயற்சியின் விளைவுகளே அவை.

செயல் புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.

வெற்றி மட்டுமே முக்கியம் இல்லை. எல்லா நேரங்களிலும் நீங்கள் முழுமையாக முயற்சி செய்கிறீர்களா என்பதே முக்கியம். அது, விரும்பிய விளைவுகளைத் தரும்.

# முயற்சி மொழிகள்!

வெற்றிக்கான முயற்சி என்பது, தெளிவான திட்டமிடலும் தயாரிப்பும் சேர்ந்தது.`

எந்த ஒரு செயலிலும் 100 சதவிகித உழைப்பைக் கொடுத்தால், அந்த முயற்சி நிச்சயம் நல்ல பலனைத் தரும்.

உங்களைப் போன்ற மற்றவர்களைத் தாண்டி உங்களை உயரத்தில் வைத்திருப்பது, உங்களின் முயற்சி மட்டும்தான்.

நீங்கள் இருப்பது சரியான பாதை என்றாலும்கூட, எந்த முயற்சியும் செய்யாமல் சும்மா இருந்தால் எதுவுமே நடக்காது.

உங்களின் மிகப்பெரிய சொத்து நீங்கள்தான். உங்களுக்கான பயிற்சியிலும் முயற்சியிலும் முதலீடு செய்யுங்கள். அது எப்போதும் லாபம் தரும்.

முதல் அடியை எடுத்துவைத்து ஒரு புது முயற்சியைச் செய்யும்போது, கடுமையான போராட்டம் இருக்கும். மோசமான வலி ஏற்படும். அதைத் தாண்டிவிட்டால் எல்லாமே இனிமையாகிவிடும்.

முயற்சியை முழுமையாக வெளிப்படுத்தி சாகசங்கள் செய்வதிலும், அதனால் அடையும் வெற்றியிலும் மட்டுமே உண்மையான மகிழ்ச்சி கிடைக்கிறது.

இயல்பைவிட கூடுதலான முயற்சி, மற்றவர்களைவிட அதிக உழைப்பு இருந்தால் போதும், தோல்வி அடையும் எந்த சூழலையும் வெற்றியாக மாற்றிவிடலாம்.

வாழ்க்கை மிகவும் குறுகியது. எனவே, எதிர்மறையான சூழலில் நேரத்தை வீணடிக்காதீர்கள். எப்படியாவது முயற்சி செய்து முன்னேறிப் போய்விடுங்கள்.

வலியைத் தாங்கி வலிமையுடன் முயற்சி செய்து முன்னேறும் எவருக்கும் வெற்றியின் வாசல் கதவு திறக்கும்.

முயற்சியே உங்களை எழுந்துநின்று பேசச் செய்யும். நீங்கள் பேசுவதை இந்த உலகமே கேட்கும்படியும் செய்யும்.

முயற்சியை யார் ஒருவர் கைவிடுகிறாரோ, அப்போதே அவரின் திறமை அவரிடமிருந்து போய் விடுகிறது.

உலகில் யாருமே வெற்றியாளர்களாகப் பிறப்பது இல்லை. ஒவ்வொருவருக்கும் அவரவர் மேற்கொள்ளும் முயற்சிகளைப் பொறுத்தே முன்னேற்றமோ வீழ்ச்சியோ ஏற்படுகிறது.

உங்கள் திறமை என்ற பொக்கிஷத்தைத் திறக்கும் சாவி, வலிமையோ, புத்திசாலித்தனமோ இல்லை. தொடர்ச்சியான முயற்சிதான் அதைத் திறந்து காட்டும்.

நேற்றைய பொழுதும் நிஜமில்லை; நாளைய பொழுதும் நிச்சயமில்லை. இன்றைக்கு மட்டுமே நம் கையில்.

# முயற்சியே முதுகெலும்பு!

**நம்மால் முடிந்தவரை செய்வது முயற்சியல்ல. நாம் நினைக்கும் காரியங்களை முடிக்கும் வரை முயற்சி செய்வதே முயற்சியாகும். விடா முயற்சி உயர்ந்த இடத்தை அடைய உதவி செய்யும். அதேபோல் உயர்ந்த இடத்திலிருந்து கீழே விழாமல் நம்மைப் பாதுகாக்கும். முயற்சி செய்தால் நம்மால் முடியாத செயல் எதுவுமில்லை. உலகில் ஒவ்வொரு உழைப்பாளியும், ‘என்றாவது ஒரு நாள் நானும் வென்றுவிடுவேன்’ என்ற நம்பிக்கையுடன் முயற்சியைத் தொடர்கிறார்கள்.**

ஆனால், சிலர் இழப்புகளாலும் தோல்விகளாலும் துவண்டு போகிறார்கள். வாழ்க்கையில் கடினமான தருணத்தில் இருப்பதாக உணர்கிறார்கள். தங்கள் முயற்சி எதுவும் பலனளிக்கவில்லை, எல்லாம் முடிந்துவிட்டது என நினைத்து வருத்தமடைகிறார்கள். அவர்கள் எதை இழந்தாலும், ஒன்றை மட்டும் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். இன்னும் காலம் கடந்துவிடவில்லை.

உலகின் பெரும் வெற்றியாளர்கள் யாரும் ஒரே வயதில் தங்களுடைய வெற்றிகளை அடையவில்லை. பராக் ஒபாமா 56 வயதில் அமெரிக்க அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுவிட்டார். ஜோ பைடன் 78 வயதில்தான் அந்தப் பதவிக்கே வந்தார். 20 வயதில் வாழ்க்கையில் ஜெயிக்கத் தொடங்கியவர்களும் உண்டு. 60 வயது வரை தோற்று, அதன்பின் ஜெயித்தவர்களும் உண்டு. ஆனால், அனைவருக்கும் ஒன்று மட்டும் பொதுவானது. அவர்கள் எந்தத் தருணத்திலும் தங்கள் முயற்சியைக் கைவிடவில்லை. ‘இதோடு பின்வாங்கிவிடலாம்’ என்ற குரல் அவர்களுக்குள் ஒலித்துக்கொண்டே இருந்தாலும், அதை எப்போதும் அவர்கள் செய்ததில்லை. நம்பிக்கையை இழக்காததே அவர்களின் வெற்றிக்குக் காரணம்.

உங்கள் வாழ்வு உங்கள் கையில். அது உங்களது கட்டுப்பாட்டைவிட்டு எங்கும் போகாது. ‘எல்லாம் முடிந்துவிட்டது’ என ஆன பின்னும் கூட பூஜ்ஜியத்திலிருந்து துவங்கி சாதனையாளர்களாகப் பலர் ஆகியிருக்கிறார்கள். அனைத்தும் கையைவிட்டு நழுவுவது போல உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் அது உங்களது நம்பிக்கை தளர்வதால் வருவதுதான். நம்பிக்கையை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். மனம் தளராதீர்கள்.

ஓட்டப்பந்தயங்களில் இரண்டு வகை உண்டு. உசைன் போல்ட் போன்ற ஜாம்பவான்கள் பத்து நொடிகளுக்குள் மின்னலாக ஓடி வெற்றி பெறும் 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் ஒரு ரகம். பல மணி நேரம் ஓடி ஜெயிக்கும் மாரத்தான் ஓட்டப்பந்தயம் இன்னொரு ரகம். இதில் ஆரம்ப நிமிடங்களில் மின்னலாக ஓடுபவர்கள் பாதி வழியிலேயே சோர்ந்து விழுந்துவிடுவார்கள். ஆரம்பத்திலிருந்து உற்சாகம் இழக்காமல், சக்தியை இழக்காமல் நிதானமாக ஓடியபடி இருக்க வேண்டும். எல்லைக்கோடு கண்ணில் தெரியும்போது ஒரே பாய்ச்சலாக ஓடி அதைத் தொட வேண்டும். தொடர் முயற்சியில்தான் இந்தப் பயிற்சி வசமாகும். வாழ்க்கையின் இலக்குகளை இந்த மாரத்தான் போட்டி போலவே அணுக வேண்டும்.

எந்த செயலும் ஆரம்பிக்கும்போது மலைப்பாகத்தான் தோன்றும். குழந்தைகள்கூட நடக்க ஆரம்பிப்பதற்கு முன்னால் விழுந்து எழுந்துதான் நடை பயிலுகின்றன. கீழே விழுகிறோமே என்று அவர்கள் முயற்சி செய்யாமல் விடுவதில்லை. விடாமுயற்சியே பல சாதனைகளின் அடித்தளம். முயற்சியே நம் முதுகெலும்பு.



# முட்டி மோதும் முயற்சி!

ஒரு பெரிய மாமரம். அதன் நிழலில் ஒரு சிறு மாங்கன்று முளைத்தது. பெரிய மரத்தின் நிழலில் அதற்கு சூரிய ஒளி கிடைக்கவில்லை. எந்நேரமும் அது இருளிலேயே வளர வேண்டியிருந்தது. சூரிய வெளிச்சம் கிடைத்தால்தான் தன்னால் ஆரோக்கியமாக வளர முடியும் என்பதை உணர்ந்த அந்த மரக்கன்று, வளைந்து வளைந்து பெரிய மாமரத்தின் நிழலிலிருந்து வெளியே வந்தது. நீண்ட முயற்சிக்குப் பிறகு அதன் நுனியில் இருந்த துளிரில் சூரிய வெளிச்சம் பாய்ந்தது. அதன்பின் அது வேகமாக வளர ஆரம்பித்தது.

வாழ்க்கைப் போராட்டத்தில் துணிச்சலான முயற்சியே வாழ்வை மலரச் செய்யும். இருள் நம்மைச் சூழ்ந்திருந்தாலும், வெளிச்சம் வருவதற்கான அடையாளங்களே இல்லாவிட்டாலும், நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. ஒளியைத் தேடும் முயற்சியும் உழைப்பும் இருந்தால், எப்போதும் ஜெயிக்கலாம்.

வறண்ட மண்ணிலும், பாறை இடுக்குகளிலும் சிறு செடிகள் முளைத்திருப்பதைக் காண்கிறோம். முறிந்து விழுந்த மரம்கூட, மீண்டும் துளிர்விட்டு வளரத் துடிக்கிறது. எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தொடர்ந்து போராட வேண்டும் என்று இயற்கை நமக்கு இப்படித்தான் சொல்லித் தருகிறது.

நாம் எடுக்கும் முயற்சிகள் உடனடியாக வெற்றி தராதபோது, தொடர்ச்சியான தோல்விகளைக் காணும்போது, பின்வாங்கிவிடலாமா என்ற சலிப்பு தோன்றும்போது, ஒரு விஷயத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். டேவிட் காக்கின்ஸ் என்ற மனோதத்துவ நிபுணர் சொன்ன விஷயம் அது. 'அவ்வளவுதான், இதற்கு மேல் என்னால் எதுவுமே செய்யமுடியாது' என்று நாம் சோர்ந்து போகும்போது, உண்மையில் நாம் 40 சதவிகித சக்தியை மட்டுமே இழந்திருக்கிறோம். உண்மையாக முயற்சி செய்தால், மீதி இருக்கும் 60 சதவிகித சக்தியுடன் நாம் போராட முடியும்.

❖ என் எல்லைகள் இதுதான் என்று நீங்களே கற்பனை செய்துகொள்ளாதீர்கள். நீங்கள் நினைப்பதையும் தாண்டிய மகத்தான செயல்களை உங்களால் செய்ய முடியும்.

❖ எப்போதும் சொகுசான, வசதியான சூழல்களுக்குப் பழகிக் கொள்ளாதீர்கள். வசதியான சூழல்களில் வளர்ச்சி கிடைக்காது. புதிரான சூழல்கள்தான் உங்களின் போராட்ட குணத்தை வளர்க்கும்.

❖ எந்த செயலையும் ஒருவித ஒழுங்குடன் செய்வதற்குப் பழகுங்கள். அந்த நேர்த்தியே உங்களுக்கு வெற்றி தேடித்தரும்.

❖ 'இனிமேல் முயற்சி செய்ய வேண்டாம்' என்று பின்வாங்கும் நேரத்தில், அதற்கான காரணத்தை அலசிப் பாருங்கள். பயம்தான் அதற்குக் காரணமா? அந்த பயத்தை துணிச்சலால் துரத்துங்கள். திறமைக் குறைவு காரணமா? திறமையை வளர்த்துக்கொள்ளுங்கள். முழுமையாகக் கற்றுக்கொள்ளவில்லை என்று நினைக்கிறீர்களா? அறிவைப் பெருக்கிக்கொள்ளுங்கள்.

❖ ஒரு செயலை நீங்கள் செய்வதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கும். வேலை, தொழில், வாழ்க்கை என எதிலும் முன்னேற வேண்டும் என நினைப்பதற்குக் காரணம், வாழ்க்கையில் மேலான இடத்தை அடைய வேண்டும் என்பதுதான். அந்தக் காரணத்தை தினம் தினம் நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். அதுவே உங்களை மேலே கூட்டிச் சென்றுவிடும். ●






## குழந்தைகள் நேசிக்கும் கதைசொல்லி!

ஹாரிபாட்டர் கதைகளுக்கு உலகெங்கும் கோடிக்கணக்கான குழந்தைகள் ரசிகர்கள். ஹாரிபாட்டர் வரிசையில் புதிய நூல் ஒன்று வெளியானால், முதல் நாளிலேயே லட்சக்கணக்கில் விற்றுத் தீரும். திரைப்படங்களாகவும் வந்து அவை பெரும் வரவேற்பு பெற்றன.

ஹாரிபாட்டர் கதைகளை உருவாக்கிய ஜே.கே.ரௌலிங்கை இன்று தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. ஆனால், ஆரம்ப கட்டத்தில் அந்தக் கதைகள் யாருக்குமே பிடிக்கவில்லை. மணமுறிவாகி ஒரு பெண் குழந்தையுடன் தனியாக வசித்த ரௌலிங், வருமானத்துக்கு வழி தெரியாமல் தவித்தார். அரசின் சமூக நலத்திட்ட உதவி மட்டுமே அவரின் வாழ்க்கைக்கு உதவியாக இருந்தது. அந்த சூழலில், குழந்தைகளுக்கான புத்தகம் எழுதவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக தனது ஹாரிபாட்டர் கதையைப் பல வருடங்கள் தொடர்ந்து எழுதினார்.

பல பதிப்பாளர்கள் அவரது புத்தகத்தை வெளியிட மறுத்தனர். ‘இதெல்லாம் ஒரு கதையா? இதை யார் படிப்பார்கள்?’ என்று கிண்டல் செய்தார்கள். மனம் தளராமல் ரௌலிங் முயற்சி செய்தார். கடையில் ஒரு பதிப்பாளருக்கு அதன் அருமை புரிந்தது. அவர் வெளியிட, இன்று ஹாரிபாட்டர் புத்தகங்கள் பிரபலமாகிவிட்டன. ஹாரிபாட்டரின் மந்திரவித்தைகள் நிகழ்த்திய மாயாஜாலம் போல ரௌலிங்கின் வாழ்க்கையே மாறியது.

‘‘நான் குழந்தையாக இருந்தபோது எனக்கு என்ன படிக்கப் பிடிக்குமோ அதைத்தான் நான் எழுதினேன். இது நிச்சயம் குழந்தைகளுக்குப் பிடிக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. டி.வி பெட்டியின் முன்னால் கட்டுண்டு கிடந்த லட்சக்கணக்கான குழந்தைகளை புத்தகங்களின் மீது கவனம் திருப்ப வைத்தேன். என் முயற்சியின் மிகச் சிறந்த பலனாக இதையே நினைக்கிறேன்’’ என்கிறார் ரௌலிங்.

## ஒரே நாளில் உலகப்புகழ்!

லயனெல் மெஸ்ஸி. அர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த இவரை ‘கால்பந்து உலகின் கடவுள்’ என ஆராதிக்கிறார்கள் ரசிகர்கள். முதல் போட்டியிலேயே அவர் பிரமாதமாக கோல் அடித்து தன் அணியை ஜெயிக்க வைத்தபோது, ‘ஒரே நாளில் மெஸ்ஸி உலகப்புகழ் பெற்றுவிட்டார்’ என்று வர்ணித்தார்கள். அதைக் கேட்டு மெஸ்ஸி சிரித்தார். ‘‘கிட்டத்தட்ட 17 ஆண்டுகள். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து, நாள் முழுக்க பயிற்சி எடுத்து, வேறு எதைப் பற்றிய சிந்தனையும் இல்லாமல் மூளை முழுக்க கால்பந்து விளையாட்டு பற்றிய எண்ணங்களைச் சுமந்து உழைத்ததால்தான் நான் ஒரே நாளில் உலகப்புகழ் அடைய முடிந்தது’’ என்றார் அவர். ஒரு வெற்றிக்குப் பின்னால் எப்படிப்பட்ட உழைப்பு வேண்டும் என்பதையே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

மெஸ்ஸியின் தந்தை இரும்புத் தொழிற்சாலையில் ஒரு சாதாரண தொழிலாளி. ஐந்து வயதிலிருந்து அவர் கால்பந்து விளையாட ஆரம்பித்தார். 11 வயதுக்குள் அவர் திறமையான வீரராக தன்னை நிரூபித்திருந்தார். அந்த வயதில் அவருக்கு ஹார்மோன் கோளாறு ஏற்பட்டது. அவருக்கு சிகிச்சை தர குடும்பத்தின் சூழல் இடம் தரவில்லை. ஸ்பெயின் நாட்டு கால்பந்து அணி ஒன்று அவருக்கு சிகிச்சை செலவைத் தந்தது. அதற்காக அந்த அணியின் சார்பில் அவர் பல ஆண்டுகள் விளையாடினார். தன் நாட்டு அணியிலும் இடம்பிடித்தார். அந்த சிகிச்சைக்குப் பிறகுதான் அவர் இன்னும் உறுதியான, திறமையான வீரராக உருவெடுத்தார். தன் முயற்சியால் அர்ஜென்டினா நாட்டுக்காக ஒலிம்பிக் பதக்கம் முதல் பல கோப்பைகளைப் பெற்றுக் கொடுத்தார்.



## ஒற்றைக் கடைப் புரட்சி!

ஒரு சாதாரண பலசரக்குக் கடை வைத்திருந்த ஒருவர், அமெரிக்காவின் நம்பர் 1 பணக்காரராக மாறிய கதை உங்களுக்குத் தெரியுமா? அமெரிக்காவின் அடையாளங்களில் ஒன்று, வால்மார்ட் ஸ்டோர். ஒவ்வொரு நகரத்திலும் இருக்கும் வால்மார்ட் கடைகளில் கிடைக்காத பொருளே கிடையாது. இன்று உலகின் பல நாடுகளில் வர்த்தகம் செய்யும் நிறுவனமாக வால்மார்ட் வளர்ந்திருக்கிறது.




வால்மார்ட் நிறுவனர் சாமுவேல் வால்டன் ஒன்றும் பரம்பரைப் பணக்காரர் இல்லை. சில மாடுகளை வைத்திருந்த சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். பால் வியாபாரம்தான் அவரின் முதல் தொழில். அதன்பின் வீடுகளுக்குப் பேப்பர் போடுவது, ஹோட்டல்களில் வேலை செய்வது என்று வளர்ந்தார். தன் 26 வயதில் சின்னதாக ஒரு கடையில் வேலை செய்தார். அங்கு வியாபார நுணுக்கங்கள் கற்றார்.

வங்கியில் கடன் வாங்கி தன் முதல் கடையைத் திறந்தார். மற்றவர்களைவிட வித்தியாசமாக வியாபாரம் செய்பவர் என்று பெயர் வாங்கினார். அந்தக் கடை பல கடைகள் ஆகின. 20 ஆண்டுகளில் அவர் அமெரிக்காவின் நம்பர் 1 பணக்காரராக உயர்ந்தார். 1992ம் ஆண்டு அவர் மறையும்போது 1,960 வால்மார்ட் கடைகள் இருந்தன. சுமார் நான்கு லட்சம் பேர் அவர் கடைகளில் வேலை பார்த்தனர். சுமார் மூன்றே முக்கால் லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு ஆண்டு வியாபாரம் நடைபெற்றது. அத்தனைக்கும் ஆதாரம், அவரின் சின்ன முயற்சி.



## மனம் தளராத ஓவியர்!

இன்று உலகில் அதிக விலைக்கு விற்பனையாகும் ஓவியங்களில் வின்சென்ட் வான்கா வரைந்த ஓவியங்களுக்குத் தனி இடம் உண்டு. தன் வாழ்நாளில் 900 ஓவியங்களை வான்கா வரைந்தார். அந்த ஓவியங்களில் ஒன்று தங்களிடம் இருப்பதை மாபெரும் பொக்கிஷமாகக் கருதுகிறார்கள் கோடீஸ்வரர்கள். அதனால் அவை கோடிகளில் விலை போகின்றன.

ஆனால், உங்களுக்கு ஒரு விஷயம் ஆச்சர்யம் தரலாம். வான்கா உயிருடன் இருந்த காலத்தில் அவரின் ஒரே ஒரு ஓவியம் மட்டுமே விற்றது. மற்ற ஓவியங்களை வாங்க ஆளில்லை. தனி பாணியில் புதுமையாக இருந்த அவரின் ஓவியங்கள் அப்போது அவ்வளவு வரவேற்பு பெறவில்லை. என்றாலும் அவர், 'யாருமே வாங்கத் தயாராக இல்லாத ஓவியங்களை ஏன் வரைய வேண்டும்' என்று சோர்ந்து போகவில்லை. மனம் தளராமல் வரைந்துகொண்டே இருந்தார். தன் ஒவ்வொரு ஓவியத்திலும் கூடுதல் முயற்சியைச் செலுத்தி உன்னதமாக வரைந்தார்.

அவர் காலத்தில் வாழ்ந்த பல ஓவியர்களை இன்று யாருக்குமே தெரியாது. ஆனால், வான்கா தன் ஓவியங்களால் காலத்தைத் தாண்டி வாழ்கிறார். இன்றும் அவரது ஓவியங்களின் தனித்தன்மை குறித்து உலகம் முழுக்க ஓவியர்கள் பேசுகிறார்கள். தங்கத்தை விட விலை உயர்ந்ததாக அவர் ஓவியங்கள் மதிக்கப்படுகின்றன.

RAMRAJ காட்டன்

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
**போன்:**
**0421-4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiar.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code -ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)


ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**





Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


சாதிக்கத் துடிக்க
நினைப்பவரின்
சரியான தேர்வு.
தரமான, மிருதுவான,
சுகம் தரும் ராம்ராஜ் பனியன்கள்
மற்றும் உள்ளாடைகள்
உங்களின் கட்டுடலுக்கான
சரியான தேர்வு.
Shreyas Iyer - Cricketer
www.ramrajcotton.in
Inners for Winners
RAMRAJ
BANIANS • BRIEFS • TRUNKS
SUKRA
Super Fine Banians
ROMEX
Supreme Banians
RISE-UP
Premium Banians
ARCHERY
Gym Vest
COMPACT
Flexible Rib Vest
ACOSTE
BANIANS | BRIEF | TRUNKS
கம்பெனி ஷோரூம் & முன்னணி ஜவுளி நிறுவனங்களிலும் கிடைக்கும்

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2019-21. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-11-2021. Posted at Tirupur BPC on 5th of every month.

